திருநெல்லை

ஆன்மீகத் திங்களிதழ்

குரோதி - பங்குனி - 2025 - ஏப்ரல் | இணைய வழி - மலர் - 2 - இதழ் - 8

ருத்ர ஜெபத்தில் தேனாபிஷேகத்தின் போது நமது தென்சபாநாயகர் கோவில்

ஸ்படிக லிங்கமூர்த்தி

திருநெல்லை

இணைய வழி ஆன்மீகத் திங்களிதழ்

குரோதி – பங்குனி

2025– ஏப்ரல்

இணையவழி மலர் 2 – இதழ் 8

(தனிச் சுற்றுக்கு மட்டும்)

சிறப்பாசிரியர்

பொற்கிழிக் கவிஞர்

சொ.சொ.மீ. சுந்தரம்

ஆலோசகர்

தமிழாகரர் தெ. முருகசாமி

ஆசிரியர் குழு

வெளியிடுபவர்

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் மடாலயம்

கோவிலூர் 630 307

மானகிரி (அஞ்சல்)

(வழி) காரைக்குடி

சிவகங்கை மாவட்டம்

04565–236846

94433 37011

இணைய அச்சாக்கம்

தீபா ராஜேஸ்வரி

கோவிலூர்

பொருளடக்கம்

		பக்கம்
1.	ஆசியுரை	3
2.	கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் அறிமுகம்	11
3.	சமய எழுச்சியால் சமூக மறுமலர்ச்சி காட்டிய அப்பர்	16
4.	கற்குடிக் கோயில்	24
5.	திருவிளையாடற் புராணம் தொடர்	28
6.	தினசரி வாழ்க்கைக்குத் திருபுகழ்	34
7.	கோவிலூர் புதையல்கள்	37
8.	காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம்	41
9.	விஸ்வேஸ்வரருக்குப் பிடித்த ஆனந்தவனம்	45
10.	சிவாலயங்களின் சிறப்புகள்	49
11.	திவ்ய தேச கவிதை தரிசனம்	53
12.	பெரியபுராண கதை களம்	57
13.	தென்சபாநாயகர் கோவில் தரிசனம்	58
14.	ஒலிப்பேழை	59
15.	பயிற்சிப்பேழை	60
16.	கோவிலூர் ஆண்டவர் நூலகம்	61
17.	முந்தைய இதழ்கள்	63

ஆசியுரை

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் ஆதினகர்த்தர்

உலகம் சமநிலை பெறவேண்டும்.

உயர்வு தாழ்வில்லா நிலை வேண்டும்.

நிறைவே காணும் மனம் வேண்டும்

இறைவா அதை நீ தர வேண்டும்

கவிஞர் உளுந்தூர்பேட்டை சண்முகம் அவர்கள் இயற்றிய திரைப்படப் பாடல் இது. அகத்தியர் படத்தில் அகத்தியர் பாடுவதாக வரும் இப்பாடல் உலகிற்கான சமநிலையை ஏற்படுத்துவதற்காகப் பாடப்பெற்றது. புவியின் வடபாகம் மக்கள் பெருக்கத்தினால் தாழ்வினைச் சந்தித்த நிலையில் தென்பாகம் உயர்ந்த நிலையில் இரு பக்கங்களையும் சமப்படுத்தும் முயற்சிக்கு அகத்தியர் அழைக்கப்படுகிறார். அவரின் அறிவால் உலகம் சமநிலை பெறுகிறது.

இன்று உலகில் அமைதி நிலை ஏற்படவேண்டும். நிறைவைக் காணும் மனம் வேண்டும். இறைவா அதை நீ தரவேண்டும். இறையாற்றலை மதங்கள் சொல்லி மாசுபடுத்த வேண்டாம். எல்லா மதங்களும் இறைவனின் கருணை வெளிப்பாடுகளே!

காஷ்மீரின் அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. காஷ்மீரின் பகல்காம் அருகில் உள்ள பைசரன் புல்வெளியில் ஆயுதம் ஏதுமற்ற சுற்றுலாப் பயணிகள் நவீன ஆயுதங்கள் கொண்ட அரக்கர்களால் கொல்லப்பட்டுள்ளனர். இது மிகுந்த மன வருத்தத்தை அளிக்கிறது. வாழப் பிறந்த உயிர்களை, மனிதர்களைக் கொல்லும் உரிமையை எதேச்சதிகாரத்தை அவர்களுக்கு வழங்கியது யார்? வழங்கியது எது? இந்த பயங்கரவாதச் செயல் பெருத்த ஏமாற்றத்தை காஷ்மீர் வாழ்

மக்களிடத்தில் ஏற்படுத்தியுள்ளது. அவர்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. மனிதர்கள் அற்ற மரக்காடுகள் மட்டுமே இனி காஷ்மீரில் எஞ்சி நிற்கும் அளவிற்கு கொடூரமான செயலை பயங்கரவாதத்தின் பெயரில் சிலர் அரங்கேற்றியுள்ளனர். அவர்களுக்கு உரிய தண்டனை கிடைக்கும். கிடைக்க வேண்டும்.

இக்கொடிய நிகழ்வால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நமது ஆறுதல்கள். அவர்களின் ஆன்மா அலைப்புறாமல் அமைதி பெறட்டும். காயம் பட்டவர்கள் விரைவில் குணமடைய இறையாற்றல் துணை நிற்கும். இந்நிலையில் பயங்கரவாதத்திற்கு எதிராக வன்படுகொலைகளுக்கு எதிராக நம் நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும்.

மதத்தின் பெயரால் நடத்தப்பெற்ற இந்தக் கொடிய செயல் எந்த மதத்தினராலும் அனுமதிக்க முடியாதது என்பதை இக்கொடியவர்கள் அறிய வேண்டும். சமயம் பலமா? பலவீனமா என்பது தேவையற்ற விவாதம். எல்லா சீவன்களிலும் இறைவன் இருக்கிறான் என்ற எண்ணம் இருக்கும் எவராலும் எவரையும் கொடுமைப்படுத்த முடியாது. எவரையும் கொலை புரிய முடியாது. அமைதியும் அன்பும் மட்டுமே உலகை தழைக்கச் செய்யும்.

பகல்காமில் பகலில் நடைபெற்ற இக்கொடுஞ்செயல் இனி உலகின் எந்த இடத்திலும் நடக்கக் கூடாது. பைசரன் புல்வெளியில் கொடுமை நிகழ்த்தியோர் தண்டிக்கப்பட வேண்டும்.

இனி இதுபோல் இன்னல்கள் இந்தியாவிற்கு ஏற்படக் கூடாது என்ற வேண்டுதலை நாம் இறைவனிடம் வைக்கிறோம். அன்பு எனும் பிடியுள் அடங்கும் மலையே! அவ்வன்பினால் உலகினரை அமைதி செய்க என்று நாம் வேண்டுகிறோம். இன்னல்கள் தொடரக் கூடாது என்ற நிலையில் 24.4.2025 ஆம் நாளன்று கோவிலூரில் அமைந்துள்ள தென்சபாநாயகர் திருக்கோயிலில் ருத்ர ஜபம் செய்யப்பட்டு சிறப்பு

வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன. மேலும் ‘‘டெம்பிள் கனெக்ட்’’ அமைப்பின் வழியாக இதுபோன்ற அமைதி தரும் ஆற்றல் வழிபாடுகள் நடத்தப்பட வேண்டுகோள் நமது சார்பில் வைக்கப்பட்டது. அதனடிப்படையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆலயங்களில் அமைதி வழிபாடுகள் நடத்தப்பெற உள்ளன. நாம் ஒவ்வொருவரும் அமைதியை வேண்டி ஆண்டவன் தாள் பணிவோம்.

காசி, இராமேச்வரம், காசி

காசிக்கு நாம் அருள்தரு விசுவநாதரின் திருக்கோயில் அன்னதான அறக்கட்டளையை நிகழ்த்துவதற்காக அடிக்கொருதரம் செல்லும் நல்வாய்ப்பினைப் பெற்று வருகிறோம். ஆனால் காசியே கோவிலூருக்கு வந்த அரிய வாய்ப்பு சமீபத்தில் நடைபெற்றது. காசி அருள்மிகு விசுவநாதர் திருக்கோயிலின் அறக்கட்டளையின் நிர்வாக அதிகாரி திரு விஷ்வ பூஷன் மிஸ்ரா அவர்கள் 20.4.2025 அன்று கோவிலூர் மடாலயத்திற்கு வருகை புரிந்தார்.

அவரை வரவேற்றுப் பெருமை கொண்டது கோவிலூர் மடாலயம்.

முன்னதாக நமது திருவண்ணாமலை ஈசானிய மடம் மற்றும் அண்ணாமலையார் திருக்கோயில், சிதம்பரம் பொன்னம்பல சுவாமி மடம், சபாநாயகர் திருக்கோயில், திருவரங்கம் அரங்கநாதர் திருக்கோயில், திருவானைக்காவல் ஐம்புகேஸ்வரர் திருக்கோயில் ஆகியவற்றில் அவர் சிறப்பான

வழிபாடுகளை நிகழ்த்தினார்.

கோவிலூரில் தென்சபாநாயகர் திருக்கோயில், கொற்றவாளீசர் திருக்கோயில் போன்றவற்றிலும் அவர் சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து அவர் நமது மடாலய அரங்கில் நகரத்தார் மக்களின் சிறப்பினையும், காசி அறக்கட்டளை சார்பில் நடத்தப்பெறும் அன்னதானம் குறித்தும் அவர் பெருமைபட கலந்துரையாடினார்.

‘‘நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள். நீங்களும் நானும் சிவத்தோடு தொடர்புடையவர்கள். அதனால் நாம் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் சகோதரர்கள். ஈசானிய மடத்தில் நான் விவேகானந்தரின் திருவுருவப் படத்தைப் பார்த்து மகிழ்ந்து போனேன். சங்கரர், ராமனுஜர், மத்துவர் அனைவரும் வேதாந்தவாதிகள். கோவிலூர் மடமும் வேதாந்த மடம். வேதாந்தம் சனாதனம் பெரும் பரப்பினை உடையது. நம்மில் இருந்து பிரிந்துபோன பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்றனவெல்லாம் நம்மோடு பூர்வீகத் தொடர்புடையவை. சனாதனத்தின் அங்கமாகத் திகழ்ந்தவை. மேலும் தாய்லாந்து, மலேசியா, பர்மா போன்ற நாடுகளில் எல்லாம் நம் எல்லை விரிந்திருந்தது. இந்த பந்தம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் தொடர்பு பெற்றது.

நமது விசுவநாதர் அறக்கட்டளையும் கோவிலூர் மடாலயமும் இணைந்து அன்னதானத்தைத் திட்டமிட்டுச் சிறப்புடன் நடத்தி வருகிறார்கள் சுவாமிகள். செட்டியார்கள் இனம் காசியுடன் நெருங்கிய தொடர்புடையது. வணிகம் செட்டியார்களின் முக்கியத் தொழிலாக இருந்தாலும் அவர்கள் அறத்தினையும் சிறப்புடன் செய்துவருபவர்கள். நமது அன்னதானத்தை நாளுக்கு

பாராட்டு விழா நிகழ்வின் வீடியோத் தொகுப்பு

இருமுறை வழங்கலாம் என்று சுவாமிகள் குறிப்பிட்டார்கள். அவர்களால் அது முடியும். அதனை எடுத்து விநியோகிப்பதில் இன்னும் சில வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். அதற்கான நேரம் வரவேண்டும். அதனையும் செய்வோம்'' என்று அவர் உரையாற்றினார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு நீதியரசர் சொக்கலிங்கம் அவர்கள் காசிக்கும் நகரத்தார்களுக்கும் உள்ள தொடர்பினை எடுத்துரைத்தார். இராமேசுவர பெருமையை உரைத்தார். இவ்விழாவில் திரு தினகரன் அவர்களும் கலந்து கொண்டார்.

நாம் நமது பாராட்டுரையில் ‘‘காசி விசுவநாதரன் அறக்கட்டளையின் நிர்வாக அதிகாரிகளில் ஒருவராக திரு விஷ்வ பூஷன் மிஸ்ரா அவர்கள் பொறுப்புக்கு வந்தபின் அன்னதானம் சிறப்பாக நடைபெற அவர்கள் ஆற்றிய பணிகள் அதிகம் என்று கூறினோம். மேலும் தரமான சமையல் பொருள்களை நாமே தரம் பார்த்து வாங்கிக் கொள்ளச் சொன்ன அவரின் ஒப்புதலையும், காசி விசுவநாதருக்கு நாள்தோறும் செய்யப்பெறும் நெய்வேத்தியத்திற்கான தரமான பொருள்களை வாங்கித் தரச் சொன்ன அவரின் ஒப்புதலையும் நமக்குக் கிடைத்த பெருவாய்ப்பு என்று மகிழ்ந்து உரைத்தோம்.

மேலும் காசி விசுவநாதர் அறக்கட்டளையின் சார்பில் கோசாலை நிர்வாகம், எலக்டிரிஷியன், பிளம்பர் போன்ற பணிகளைச் செய்ய திறன் மிக்க வேலைக்காரர்களை உருவாக்கி ஏழ்மைபோக்கல் போன்ற பணிகளில் நம்மை ஈடுபாடு செய்ய ஒத்துழைத்த அவரின் ஒப்புதலுக்கும் பாராட்டினைத் தெரிவித்தோம்.

அவரிடத்தில் தமிழகத்து திருவாசக அன்பர்கள் காசியில் முற்றோதல் செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தோம். அது நடைபெற்றும் வருகிறது. இனிவரும்

காலங்களிலும் அது நடைபெற அவரின் கண்ணோட்டத்திற்கு அதனை எடுத்துச் சென்றோம்.

நிர்வாக அதிகாரி திரு விஷ்வ பூஷன் மிஸ்ரா அவர்கள் சிறந்த பக்திமான். நமது மொழியில் அமைந்த திருவாசக முற்றோதலை அவர் கைகள் குவித்த வண்ணம் இன்றுக்கேட்டு கொண்டு பக்தி வயப்பட்டது அதற்கு ஒரு சான்று'' என்று நாம் அவரை நம் அன்பர்களுக்கு அறிமுகம் செய்தோம்.

இவ்விழா முடிந்து இராமேசுவரம் தரிசனத்திற்கு நிர்வாக அதிகாரி திரு விஷ்வ பூஷன் மிஸ்ரா அவர்கள் சென்றார். அங்கு நடைபெற்ற சிறப்பு வழிபாட்டில் அவர் பங்கேற்று இராமநாதசுவாமி அருள் பெற்றார். அங்கிருந்து கோடித்தீர்த்தத்தை எடுத்துக் கொண்டு அவர் காசிக்குச் சென்று முதல் பணியாக அதனை விசுவநாதருக்கு அர்ப்பணித்தார்.

இதுவே காசி இராமேசுவரம் காசி பயணமாகும். ஜோதிர்

ராமேஸ்வரம் தீர்த்தத்தால் காசி விஸ்வநாதருக்கு நடைபெற்ற அபிஷேகத்தை காண மேல் வரும் இணைப்பை சொடுக்கவும்

லிங்க தரிசனத்தில் இருந்த நிர்வாக அதிகாரி திரு விஷ்வ பூஷன் மிஸ்ரா அவர்களுக்கு இராமநாதசுவாமியின் அருள் பெற காசி விசுவநாதர் நம்மை திருவருள் துணை கூட்டியுள்ளார். அவரின் பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

வாழ்த்து

நம் அன்பர்கள் அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள். இப்புத்தாண்டில் இறை நோக்கம் பெருகி, வேதாந்தப் பெருவெளியில் நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் அறிமுகம் – 1

தத்துவராயர் இயற்றிய சசிவன்ன போதம் – 1

ஆன்மா



- முனைவர் மு.பழனியப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருவாடானை

கோவிலூர் முத்தி ராமலிங்க ஆண்டவர் வேதாந்தத்தைத் தமிழ் மக்கள் அறிந்து கொள்வதற்காகக் கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் என்ற பாட வரிசையை உருவாக்கி அதனைக் கற்றும் கற்பித்தும் வந்தார். அவர் ‘கற்க வேண்டியவை அனைத்தையும் தாய் மொழி யிலேயே கற்க வேண்டும்’ என்ற நோக்கத்தைக் கொண்டிருந்தார். இதன் காரணமாகத் தமிழ் மக்கள் வடமொழியில் உள்ள வேதாந்தக் கருத்துகளைத் தமிழ்

மொழியில் அறிந்து கொள்ளும் நிலையில் இப்பாடவரிசை உருவாக்கப்பெற்றது. மேலும் "கற்க விரும்புபவனுக்கு, ஏழ்மை, சாதி வேறுபாடுகள் தடையாக இருக்கக் கூடாது '' என்பதும் அவரின் சிறந்த நோக்கமாக இருந்தது. இதன் காரணமாகச் சமுதாயத்தின் எந்நிலையில் இருப்போரும் இக்கல்வியைக் கற்காலம் என்ற ஞான விடுதலை கிடைத்தது.

அவ்வகையில் நாநா ஜீவ வாத அறக்கட்டளை தொடங்கி ஞான வாசிட்டம் வரையான பதினாறு நூல்கள் வேதக் கல்விக்கு அடிப்படையாயின. இவற்றை நாளும் படித்தும், பாராயணம் செய்தும் வேதாந்த உட்பொருள் உணர்வது சிறப்பாகும். வடநாட்டாரால் இப்படிப்பு வரிசை கோவிலூர் மண்டலி என்று சிறப்பிக்கப்படுகிறது.

சசிவன்ன போதம்

ஏழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த வேதாந்தி தத்துவராய சுவாமிகள் ஆவார். இவர் மோகவதைப் பரணி என்ற நூலை எழுதினார். இதில் ஒரு பகுதியாக விளங்குவது சசிவன்ன போதம் ஆகும். சசி வன்னன் என்பவன் பாவங்களிலிருந்து குருவருளால் மீட்சி பெற்ற நிலையையும் குருவருளால் அவன் வேதப் பொருளை உணர்ந்த நிலையையும் இந்நூல் கருப்பொருளாகக் கொண்டுள்ளது. போதம் என்பதற்கு ஞானம் என்று பொருள். சசி வன்னன் பெற்ற ஞானம் என்பதே சசி வன்ன போதமாகின்றது. நூற்றுப்பதினைந்து பாடல்களைக் கொண்டு அமைந்த இந்நூல் ‘‘தத்துவமசி’’ என்ற வேத வாக்கியத்தின் சிறப்பினை எடுத்தியம்புகின்றது.

பாவம் புண்ணியப் பலன்களை அனுபவிப்பது எப்போது

ஒருவன் செய்த பாவ புண்ணியங்களுக்கான பயன் அடுத்த அடுத்த பிறவிகளில்தான் அனுபவிக்க வேண்டும் என்பதில்லை. இந்தப் பிறவியிலேயே அனுபவிக்க நேரிடலாம் என்கிறது இந்தப் போதம். ‘‘வினையின் பயன்மேல் ஒருகாலம் உறாது இகமே வரும்'' என்ற நிலையில் சசிவன்னன் தான் செய்த பாவச் செயல்களுக்கு இப்பிறவியிலேயே அதற்கான துன்பப் பலன்களைப் பெற்றான். 4448 நரம்புகளில் வரக்கூடிய எல்லாப் பிணிகளும் அவன் செய்த தீவினையின் காரணமாக அவனுக்கு வந்து சேர்ந்தன.

பாவ மீட்சி

சத்தீச்சுரம் என்னும் இடத்தில் இருக்கும் நந்தி பராயணர் என்ற ஞானகுருவை அவன் தன் தந்தை வழியாக அடைந்த நிலையில் குருவின் பார்வை பட்ட அளவில் அவனின் பிணித் துன்பம் நீங்கியது. பாவங்கள் கலைந்தன.

கணியாத பவம் கடுவான திருக்
கண் வைத்தலும் விட்டன காது கடும்
பிணியாவையும் நலல் பிதா இறைதாள்
பேணிப் பணியென்று பெயர்ந்தனனே (20)

என்ற அளவில் குருவின் திருக்கண் பார்வை பட்டதும் வெம்பிணிகள் பாவங்கள் சசி வன்னனுக்கு நீங்கின.

சசி வன்னன் தன் குருவின் நிழலிலிருந்து அவருக்குத் தக்க பணிவிடை செய்து அவரிடமிருந்து ஞானத்தை அமிழ்தமாகப் பெற்றுக் கொண்டே வந்தான்.

உலகக் கல்வி ஞானக் கல்வி

உலகக் கல்வி அபர ஞானம் ஆகும் . ஞானம் தரும் கல்வி பர ஞானம் ஆகம். கீழான அறிவு பர அறிவு. மேலான அறிவு அபர அறிவு. உலக பந்தம் நீக்குவது பரஅறிவாகும். வேத சாத்திர அறிவு அபர ஞானத்தைத் தரும். யோக சமாதியில் இருக்கும் பெரியோர் பர ஞானும் அறிந்தோர் ஆவர். பரம்பொருளைப் பற்றி அறிவிக்காத கல்வி வெற்றுப் புலம்பலே ஆகும்.

இயல் அறிவது இசை அறிவது இனம் அறிவது உளவாம்
அயல் அறிவது அறிவது அல அறிவு அறிவது அறிவே (38)

என்று இயல், இசை, நாடக அறிவெல்லாம் அறிவாகாது. இவைபற்றிய அறிவெல்லாம் உலக வாழ்க்கைக்கு வேண்டுமானால் பயன்படலாம். ஆத்மா ஞானத்தைத் தரும் கல்வியாக இது அமையாது.

உண்மையான அறிவை அறிவது அதாவது நானே பிரம்ம சொரூபம் என்று உணர்வதே உண்மை அறிவு. இதனை உணர்த்துவதே உண்மை அறிவாகும். அறுபத்து நான்கு கலைகளைப் பற்றிய புலமை பெற்றாலும் அவையெல்லாம் வீணே. சுத்த பிரம்மத்தை உணர்தலே சிறந்த பர அறிவு.

இறைவனுக்குப் பூசை செய்கிறோம். பூசைக்காக வெற்றிலை, பாக்கு, சந்தனம், மலர், பழங்கள் போன்றவற்றைச் சேகரித்து

கடவுளைப் பூசனை செய்கிறோம். கடவுள் வேறு, பூசைப் பொருள்கள் வேறு என்ற உணர்ந்தால் அது வீண். கடவுளும் ஒன்று, பூசைப் பொருள்களும் ஒன்று அவை கடவுளின் தோற்றங்களே என்று காண்பதுதான் வேதாந்த அறிவு. பூசை செய்பவனும் பூசைக்கு உரிய கடவுளும், பூசைப் பொருள்களும் வேறு வேறல்ல என்று கொள்வதே சிறந்த அறிவு .

நான், தான் ஆன்மா

இந்நூலில் ஆன்மாபற்றிய விவாதம் விளக்கம் மிகச் தெளிவாக உணரும்படி எடுத்துரைக்கப்பெற்றுள்ளது.

‘‘எனது ஆடை பொன், பூ, மகன், தையல் , பாய்மா

இபம்கண் முகம் கால் கை மெய் என்ன என்றும்

தனது ஆய் உரைப்பான் வகுத்து இந்த ஊனைத்

தான் என்று அயர்த்தும் சொலத்தக்கது அன்றே’’ (45)

கண், மூக்கு இவற்றை ஒருவன் பெற்றிருக்கிறான். அவன் அவற்றைக் குறிப்பிடும் பேது எனது கை, எனது மூக்கு, எனது கால், எனது மெய் என்று அடையாளப்படுத்துவான். உடலில் இருந்து வேறுபட்ட ஆடை, பொன், பூமி, மகன், மனைவி, குதிரை யானை ஆகியவற்றைச் சொல்லும்போதும் எனது குதிரை, எனது யானை, எனது தங்கச்சங்கிலி, எனது பூமி, எனது மகன், எனது மனைவி என்றே அவற்றை அடையாளப்படுத்துகிறான். என்னுடையது என்று சொல்லப்படும் உடல் பாகங்களைத் தான் என்று குறிப்பிட முடியாது. இதனால் எனது என்பது வேறு. தான் என்பது வேறு. தான் என்பது ஆன்மாவைக் குறிக்கும் என்று வேறுபடுத்திக் காட்டுகிறார் குரு,

இன்னும் ஆன்மாவைப் பற்றிப் புரிந்து கொள்ள பல உவமானங்களைக் கொண்டு அவர் விளக்குகிறார்.

தேர் என்பது ஊர்தி. அதன் உள்ளே இருந்துப் பயணிக்கும் முதலாளி போன்றது ஆன்மா. அசையும் யானை பொம்மை என்பது உடல். அந்த யானை பொம்மையை உள்ளிருந்து இயக்கும் சக்தி ஆன்மா. கண்ணாடியின் முன் நின்று கைக்கால்களை நீட்ட அந்தக் கண்ணாடி பிம்பமும் ஆடும். கண்ணாடியின் முன் நின்று ஆட்டுபவன் போன்றது ஆன்மா.

உடல் ஆன்மாவில் இருந்து



வேறுபட்டது என்று அறிகிறோம், உடலினை இயக்கும் மூச்சுக் காற்று ஆன்மாவா என்றால் அதுவும் இல்லை.

தூங்கும்போது உடலியக்கம் இருப்பதில்லை. ஆனால் உயிர் சுவாசம் இருக்கும். பிராணன் புலன்களை அறியாமல் உறங்குவதால் பிராணனும் ஆன்மா அல்ல.

மனம் தான் ஆன்மாவா என்றால் அதுவும் இல்லை. புத்தி தான் ஆன்மாவா என்றால் அதுவும் இல்லை. அகங்காரமும் ஆன்மா இல்லை. துணியப்படுவது சித்தி அதுவும் ஆன்மா இல்லை. தேகம், இந்திரியங்கள், பிராணன், மனம்,புத்தி, அகங்காரம், சித்தி ஆகிய யாவும் ஆன்மா அல்ல.

ஆன்மா என்பது போதக் கண்விழித்து அறியும் பொருள்.

(போதம் தொடரும்)

நல்வழி பாடல்கள்

பாடல் 30

தாம்தாம்முன் செய்தவினை தாமே அனுபவிப்பார்

பூந்தா மரை யோன் பொறிவழியே வேந்தே

ஒறுத்தாரை என்செயலாம் ஊரெல்லாம் ஒன்றா

வெறுத்தாலும் போமோ விதி

விளக்கம்:

ஒருவன் தன்னுடைய முற்பிறப்பிலே செய்த நல்வினை தீவினையின் பயனை வெள்ளை தாமரையில் இருக்கும் பிரம்மன் விதித்த விதி வழியே தானே தான் அனுபவிப்பார். மன்னனே (மனிதர்களே) ஆதலால் உங்களை துன்பப்படுத்தியவரை என்ன செய்யலாம்? , ஊரிலுள்ளார் எல்லாரும் திரண்டு வெறுத்தாலும் விதி போகுமா (போகாது). ஒருவன் நமக்கு தீங்கு செய்யின் அது நாம் செய்த முன் பிறவியின் வினை என்று அறிந்து அவரை துன்பம் செய்ய கூடாது. அவரின் வினையை அவர் அனுபவிப்பார்.

சமய எழுச்சியால் சமூக மறுமலர்ச்சி காட்டிய

அப்பர்

பகுதி – 13

அப்பர் பாடல்களில் 'நெஞ்சோடு கிளத்தல்'

திருமதி மு. சுப்புலட்சுமி,
வரலாற்றாய்வர்
ஆசிரியர்: www.glorioustamils.com, www.attraithingal.com,
வலையொலி/ podcast
அற்றைத்திங்கள்...
வலையொலியில் தமிழொலி

சைவம் வளர்க்கத் திருநாவுக்கரசர் கைக்கொண்ட பல வழிமுறைகளில் 'நெஞ்சோடு கிளத்தல்' இன்றியமையாதது. இறைவன் உள்நுழையும் முதல் வாயிலும் அவன் குடியிருக்கும் கோயிலும் தூய்மை நிறைந்த நெஞ்சம்தானே?

இ றை யு ண ர் வே மு த ன் மை யு ண ர் வா க த் தழைக்கச்செய்ய தம் நெஞ்சத்தை அவர் பழக்கிக்கொண்டே இருந்தார். தம் நெஞ்சுடன் ஓயாது பேசிப் புலம்பி வருந்தி, அடுத்த நிலையில் அறிவுறுத்தி வழிகாட்டிய பின், ஐயம் நீங்கித் தெளிவுற்று இறைவழி நடந்த அந்நெஞ்சை மெச்சிப் புகழ்ந்து நிறைவு கொள்ளும் போக்கை மிகச்சீராக அப்பர் பாடல்களில் காணமுடிகிறது.

நெஞ்சோடு கிளத்தல் என்றால் என்ன?

'நெஞ்சோடு கிளத்தல்' சங்கச் சாயலை அப்பரின் பல்வேறு பாடல்களில் காணலாம். அவற்றில்

ஒன்று, சங்கப்பாடல்களில் ‘நெஞ்சோடு கிளத்தல்’ என்று பகுக்கப்படும் தன் நெஞ்சுக்குரைக்கும் அமைப்புடைய பாடல்கள். தலைவியைப் பிரிந்த தலைவனும் தலைவனைப் பிரிந்த தலைவியும் பிரிவாற்றாமையால் தம் நெஞ்சோடு கிளத்தல் காதலுணர்வின் இன்பமும் துன்பமும் கலந்த வெளிப்பாடு.

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்

வார் இரும் கூந்தல் வயங்கிழை ஒழிய

வாரேன் வாழிய நெஞ்சே

(பட்டினப்பாலை 218220)

நீண்ட கரிய கூந்தலையும் ஒளிரும் அணிகளையுமுடைய தலைவியைப் பிரியவேண்டுமெனில், குறைவிலாச் செல்வங்கள் கொண்ட பட்டினம் பெறினும் வாரேனென்று தலைவன் தன் நெஞ்சுக்குரைத்தான்.

காவல் மிகுதியால் வருந்திய தலைவியோ, “இத்தனை நாட்கள் நம்மைப் பிரிந்து சென்ற தலைவனைக் கண்டவுடன் செல்லக் கோபமாக ஒன்றும் பேசக்கூடாது என்று சொல்லியபின்னும் மறந்து பேசி விட்டாயே ‘மறத்தியோ, வாழி என் நெஞ்சே’, என்று தன் நெஞ்சைக் கடிந்து கொண்டாள் (குறுந்தொகை 306).

வள்ளுவரும் கற்பியலில் ‘நெஞ் சோடு கிளத்தல்’ என்று தனி அதிகாரம் வைத்து, நெஞ்சோடு பேசும் காதலுணர்வைச் சுவைபட விளக்கினார்.

கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்

தின்னும் அவர்க்காணல் உற்று (குறள் 1244)

“நெஞ்சே! நீ அவரிடம் செல்கையில் இக்கண்களையும் அழைத்துப் போ! அவரைக் காண வேண்டும் என்று இவை என்னைப் பிடுங்கித் தின்கின்றன” என்று, நெஞ்சைத் தனியுருவாக எண்ணும் தலைவியின் புலம்பலைக் காட்டினார்.

சங்கப் பாடல்கள் உணர்த்தும் நெஞ்சோடு கிளத்தல் தனித்ததொரு ஆய்வுப்பாடம். சங்கமும் வள்ளுவமும்

காட்டிய நெஞ்சோடு பேசும் காதல் களத்தைப் பத்திமையின் உணர்வுக்களமாகக் கையாண்டவர் திருநாவுக்கரசர். நெஞ்சே, மடநெஞ்சமேஞ் என்ற பலவாறான சங்கவிளிப்புகள் அப்பரிலும் உண்டு. ஆனால், சங்கக்காதலில் தேடலும் தவிப்புமாய்க் கேட்ட விளிப்பு, பத்திமை இறைப்பற்றில் உருக்கமும் நெகிழ்வுமாய் ஒலித்தது.

உருக்கமும் நெகிழ்வுமாக அப்பர் நெஞ்சுக்குரைத்த செய்திகள் பாகுபாடின்றி, கட்டுப்பாடுகளின்றி, சமூகம் விதித்த தளைகளின்றி எக்குலத்தவரும் சிவன்பால் ஒன்றுகூடித் திரளும் வழியைத் தெளிவாக அமைத்துக் கொடுக்க உதவின.

அப்பருக்கு முன்னர் காரைக்கால் அம்மையார், 'சங்கரனைத் தாழ்ந்த சடையானைஞ். எப்பொழுதும் ஒவாது நெஞ்சே உரை', 'நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே கேளாழி நெஞ் சே கிளர்ந்து', 'மகிழ்தி மடநெஞ் சே' என்று பலவாறாகத் தம் நெஞ் சைச் சிவன்பால் செலுத்தினார். "உமையென்னும் மெல்லியலோர் கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு நீற்றானை நெஞ்சே நினை" என்று மேலும் அழகுற எடுத்துரைத்தார்.

ஆயினும், இறைவனையும் அடியவர் நெஞ்சையும் நெஞ்சோடிணைந்த அறிவையும் அறிவில் செறிவையும் பெருங்கூட்டணியாக இணைத்துப்

பத்திமை வளர்க்கப் பாடுபட்டவர் என்பதில் அப்பர் மாறுபட்டு நிற்கிறார்.

அதனால்தான்,

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
(06.008.05)

என்று, இறைவனை உள்நிறுத்தும் முதல் வாயிலாம் மனத்திற்குத் தரவேண்டிய முன்னுரிமையைப் புரியவைத்தார். முதலில் மனம், பின் அறிவாம் தலை, அறிவின்மூலம் எய்தும் அடுத்த நிலையான தெளிந்த வாக்கில் இறைவன் உள்ளான்; வாக்கில் வந்தபின் தொண்டர்களின் பணி வாயாரப் பாடுவதன்றோ? இறுதியில், அப்படிப் பாடும் தொண்டர் இனத்தோடு கலக்கிறான் இறைவன். தொண்டர்தம் நெஞ்சிற்குப் பிறகுதான் இமையவர்களின் சிரத்திற்கும் இடம் தந்தார் அப்பர்.

இறைவெனென்ற பரம்பொருளை

உள்நிறுத்தி ஆழ்ந்த தவத்தால் அவனையுணரும் யோக மார்க்கம் ஒரு சிலருக்கு மட்டுமே உரித்ததன்று; உம்மையும் எம்மையும்போல அனைவருக்கும் எளிதானதே என்றும், அதற்கு நெஞ்சைப் பழக்குதலே முதன்மைத் தேவையென்றும் முரசறைந்து, பாகுபாடின்றி அனைவரையும் ஒன்றுதிரட்டிய புரட்சியாளர் நாவுக்கரசர்.

இறைவனும் நெஞ்சமும்

இறைவனை உணருமாறு நெஞ்சைப் பழக்கும்முன், தன் நெஞ்சுடன் உரையாடி விளக்கும்முன், இறைவனுக்கும் நெஞ்சுக்குமான தொடர்பை அன்பர்கள் புரிந்துகொள்ள வேண்டுமல்லவா? ஓர் உளவியல் ஆசானைப்போல மென்மையாக ஆனால் ஆணித்தரமாக,இறையன்பில் நெஞ்சுக்குள்ள பெரும்பங்கு குறித்துப் பாடம் நடத்தினார் அவர். அத்தகு பாடங்கள் அப்பர் பதிகங்கள் முழுவதிலும் கிடைக்குமெனினும், தேடிக் கிடைத்த சில முத்துக்கள் இங்கே

இறைவன் எத்தகையவர்? எத்தகைய நெஞ்சத்தில் இறைவன் புகுந்தருளுவார்? இறைவனை நெஞ்சத்தில் வைப்பதால் கிட்டும் பயன்கள்தான் என்ன?

இறைவன் பத்தியாலேத்தி நின்று பணிபவர் நெஞ்சத்துள்ளார் (04.025.05); நினைப்பார் மனத்துளார்; உள்குவார்

உள்ளத்துளார் (06.037.09); நெஞ்சுணர உள்புக் கிருந்தபோது நிறையும் அமுதமாக இருப்பார் (06.037.03); கற்றவர்கள் நாவிலுள்ளார் ஆனால், பற்றானார் நெஞ்சுளார் (06.037.06); உள்ளத்துள்ளே நின்று பண்டை வினையறுப்பார் (06.037.08).

நாடுவது எதுவென்றாலும் அது கடும் உழைப்பாலும் ஈடுபாட்டாலுமே கிட்டும் என்பதற்கு அப்பரின் வாழ்வே சான்றல்லவா? பரம்பொருளை உணர்ந்திட நெஞ்சுக்குத் தேவையான தகுதிகள் என்னென்னவென்று நாவுக்கரசர் உரைத்தார்?

‘நேச மாகி நினைமட நெஞ் சமே’யென்று அடிப்படை அன்பை வலியுறுத்தினார். எதற்காக? ஆனைக்கா அண்ணல், குலம் நலம் சுற்றம் பாசமற்றுப் பராபரவானந்தம் அளித்திடுவார் அதற்காக! ‘நீதியா னினைசெய் நெஞ்சே நிமலனை’ என்று நல்ல நெறிகளுடன் நினைக்கச் சொன்னார்.

நாட்டையாளும் அரசருக்கும் அஞ் சாமல் நெறி பகர்ந்த உத்தமர் அப்பர்

நெஞ்சே! இந்த மண்ணை உடல் நீங்கும் காலம் வந்துவிடின் தினையளவு நேரமும் வாழக் கிட்டாது. அப்படிப்பட்ட இந்த உடலைப் பெரிய பொருளென்றெண்ணி, மதியாமல், “அனைத்துலகும் ஆளலாமென்று பேசும் ஆங்காரந் தவிர்நெஞ்சே” என்று இடித்துரைத்தார்.

உண்மை அன்பால் நினைத்தாலே இறைவனருள் கிட்டிடும் என்ற எளிமையான வழிமுறையைத் திருநெய்த்தானப் பதிகத்தில் நெஞ் சுக்கோதினார். ‘ஏழை நெஞ்சே!’ என்றும் ‘நெஞ்சமே விளம்பக் கேள்நீ!’ என்றும் நெஞ்சை அழைத்து, பதிகம் முழுமையும் இறைவனை ‘நினையுமா நினைந்தக்கால் உய்யலாமே’ என்றார். மேலும் உரிமையுடன், எண்திசை யிலுள்ளோரும் தொழுதிட அவர்கள் இருப்பிடம் சென்று அருள்தரும் திருநெய்த்தானத்து இறைவர், தமக்கு மட்டும் நெஞ்சுக்குள் இருந்து அருள்புரிபவர் என்றுரைத்தார். திருநெய்த்தானப் பதிகத்தின் பத்து பாடல்களிலும் ‘நெய்த்தானா என் நெஞ்சுளாயே’ என்று இதனை உறுதிபடுத்தினார் அப்பர்.

இதுமட்டுமா? எப்படிப்பட்ட நெஞ்சம் இறைவன் விரும்பும் நெஞ்சம்?

‘நிறையுடைய நெஞ்சி னிடையாய் போற்றி; நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி’, என்ற அப்பர் வாக்கிற்கு விளக்கமும் வேண்டுமோ?

திருவங்கமாலை பாடி, தேடித் தேடொணாத் தேவனைத் தன்னுள்ளே கண்டுகொண்ட அப்பர், உள்ளத்தில் ஈசனையுணர்ந்து விரிவாகப் பாடிய பதிகம் உள்ளத் திருக்குறுந்தொகை (05.098).

‘அமுதை, தேனை, தேனின் தெளிவை, அத்தெளிவு தந்த ஊறலாகிய இறைவனைக் கண்டு கொண்டதெனுள்ளமே; எந்தையை, உள்ளத்தொளியைக் கண்டதுள்ளமே; எம்மானை ஏறேறுமெந்தையைக் கண்டதெனுள்ளமே; என்னெஞ் சில் ஈசனைக் கண்டதெனுள்ளமே; சிந்தையுள் சிவனாய் நின்ற உருவினைக் கண்டுகொண்டது எனுள்ளமே; நெஞ்சினுள் நிறைவாய்நின்ற ஈசனைக்கண்டு கொண்டதெனுள்ளமே’

என்று, இறைவனை உள்ளத்தில் அமர்த்தியபின் ஆனந்தக் கூத்தாடிய அப்பரின் உணர்வலைகளைப் படம்பிடிக்கும் பதிகமது.

நெஞ்சோடு கிளந்த பதிகங்கள் இரண்டு திருவையாறு மற்றும் திருவாரூர்

பணிவும் பற்றும் நிறைவும் எய்திய ஓர் ஆசிரியர், தாமுணர்ந்த இறைநெறிப் பாடங்களைக் கண்முன்னே வாழ்ந்துகாட்டும்போது, அவரைப் பின்பற்றும் உந்துதலும் நம்பிக்கையும் மாணாக்கர்களுக்கு வந்துவிடுவது எளிதன்றோ? நாவுக்கரசர் தம் நெஞ்சோடு கிளந்த இரண்டு பதிகங்கள், அத்தகு புரிதலை ஏற்படுத்துபவை. அவை, சைவம் வளர்க்க மட்டுமன்றி சைவ நெறி வழிகாட்டலிலும் இன்றியமையாச் செய்திகள் அடங்கியவை. திருவையாறு, திருவாரூர் ஆகிய திருத்தலப் பதிகங்களில் அப்பர், நெஞ்சை விளித்து வழங்கிய நெறிகள் நெஞ்சை நெகிழ்த்தவும் அறிவைத் தூண்டவும் செய்பவை.

சமூகம் அமைத்த கட்டுப்பாடுகளின்றி நெஞ்சே இறைவன் வாழும் ஆலயமெனவும்; சாத்திரச் சடங்குகள் களைந்து அன்புகொண்டு நெஞ்சில் நினைத்தலே அருந்தவமெனவும்; வேதவேள்வி நெறிமுறைகள் இல்லாமல் நெகிழ்ந்துணரும் தாய்மொழியே இறைவழிபாட்டின் மொழியெனவும் உறுதிபட மாற்றச்சொல்லி, இறைவழிபாட்டை எளிமைப்படுத்தப் போராடிய நாவுக்கரசரின் உயர் நோக்கைப் படம்பிடித்துக் காட்டுவன இவை.

திருவையாற்றுப் பதிகம் (04.039)

அப்பர் பதிகங்களில் எப்போதும் ஒருவித முறைமை இருக்கும் என்பதை நாமறிவோம். படிப்படியாக மாற்றம் காணும் நெஞ்சத்தை இங்கு காணமுடிகிறது.

பாடல்களின் முதலிரு வரிகள், சமணம்தழுவி வீணில்கழிந்த தம் வாழ்வையெண்ணிய புலம்பலாகவும் இயலாமையின் குரலாகவும் ஒலிக்கின்றன. ‘சமணரோடு

நேசத்தாலிருந்த நெஞ்சை நீக்குமாறறிய மாட்டேன்’ என்றும், ‘வடுக்களோடிசைந்த நெஞ்சே மதியிலீ பட்டதென்னே’ என்றும் வருந்தினார் அப்பர்.

அடுத்த நிலையில், உண்மையான இறையன்பைப் புரிந்துகொண்ட நெஞ்சம் சிவபெருமானை உள்ளே வைத்து அழகுபார்த்தது; அத்தகு நெஞ்சத்தை மெச்சிப் பாராட்டி மகிழ்ந்தார்.

“தூய அறிவுடையோர் வணங்கியேத்தும் திருவையாறமர்ந்த தேன்போன்ற பெருமானோடு கூடிக்களிக்கும் நெஞ்சமே உன் அழகுதான் என்னே!” (04.039.02); “மொட்டுடன் தாமரைகள் நிறைந்த நீர்நிலைகள் கொண்ட திருவையாறமர்ந்த தேனோடு ஒட்டிநிற்கும் உள்ளமேஞ் உன்னை நான் மெச்சுகின்றேன்” (04.039.03); என்று பாராட்டியதோடு, “தேன் நிறைச் சோலைகள் சூழ்ந்த திருவையாறமர்ந்த தேனை மறவாத நெஞ்சமேஞ் உனக்கு இந்த நன்மதி வாய்த்தது எவ்வாறு!” (04.039.06) என்று வியந்து களிக்கிறார் நாவுக்கரசர்.

இறைவனை உள்நிறுத்திய நெஞ் சிற்கான அடுத்த வழிகாட்டல் என்ன?

“எது தவமென்பதைத் தவறாகப் புரிந்துகொண்டு நெஞ்சே மதியிலாது இருந்தாயே.. எது தவமென்று தெரியுமா?” எனக் கேட்டார். “மடுக்களில் வாளை பாயுந் திருவையாறமர்ந்த தேனை அன்பாய் நினைத்திடு நெஞ்சே அதுவே அருந்தவம்,” என்று தெளிவுபடுத்தினார்.

அதுமட்டுமா? இறைவனை மனதில் வைத்து நினைக்கும் தவத்தின் பயன்தான் என்ன?

அருந்தவ முனிவரேத்துந் திருவையாறமர்ந்த தேனைப்

பொருந்திநின்றுன்னு நெஞ்சே பொய்வினை மாயுமன்றே

என்று விடை பகர்ந்து உணர்த்தினார். ஞானியர் விரும்பும் தவப்பயன் இறையருளே. ஆனால், அப்பர் மக்களில் ஒருவர்; மனிதம் பேணலை வலியுறுத்தியவர். அதனால்தான், சிவபெருமானை மனதில் நிறுத்துவதால் பொய்யும் வினையும் ஒழியும் பயன்கிட்டும் என்றார்.

திருவாரூர் பதிகம் (06.031)

இது, நெஞ்சைச் சிவன்பால் செலுத்தி ஒருமுகப்படுத்தும் மனவளக்கலையைப் பயிற்றுவிக்கும் பதிகம். “இடர்கெடுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா” என்று கைநீட்டி நெஞ்சை அழைத்து நெறிகாட்டும் சிறப்புப் பதிகம்.

- இறைவனை என்னவெல்லாம் சொல்லிப் போற்றி வாழ்த்த வேண்டும்?
- மனமுருகிப் பணிந்தேத்துவது எப்படி?
- வாழ்த்தலை எவ்வாறு செய்ய வேண்டும்?

• அவ்வாறு போற்றி வழிபடும் இறையுணர்வின் பயன்கள் என்ன?

என்று ஐயம் திரிபறக் கற்றுக்கொடுக்கும் பதிகமது.

• இறைவனை எப்படிப் போற்றி வாழ்த்த வேண்டும்?

திருவாரூர் குடிகொண்ட சிவபெருமானைப் பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும், அம்மானே! ஆரூர் எம் அரசே! எழில் ஆரூரா! அணி ஆரூர் இடம் கொண்ட அழகா! செல்வம் மல்கும் திருஆரூரா! பொழில் ஆரூரா! ஆரூர் எம் ஐயா! ஆரூர்த் திருமூலட்டானா! எழில் ஆரூர் இடம்கொண்ட எந்தாய்! என்று தலப்பெயர்ப் பாடி அழைத்தார் அப்பர்.

இறைமுன் நின்று பாடியுருகும் போற்றிச் சொற்றொடொர்களைப் பதிகம் முழுக்கப் படித்துய்யலாம். கோயில்களில் தமிழ்மொழி வழிபாட்டிற்கான வித்துக்கள் இவை. கூடவே, ஆரமுதே! ஆதீ! சங்கரா, சய! போற்றி போற்றி! சிவலோக நெறி தந்த சிவனே! வானோர்க்கெல்லாம் அதிபதியே! ஆரமுதே! ஆதீ! பரஞ் சோதீ! பண்டரங்கா! பாவநாசா! தேவதேவே! இமையோர் ஏறே! எம்பெருமான்! கடி நாறு பொழில் கச்சிக் கம்பா கற்பகமே! என்று பலவாறாக விளிக்க நெஞ்சுக்கு அறிவுறுத்தினார்.

• இறைவனை மனமுருகிப் பணிந்தேத்துவது எப்படி?

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்

பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்

சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்

சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்!

“உற்றவரும் உறு துணையும் நீயே” என்றும்,

“உன்னை அல்லால் ஒரு தெய்வம் உள்கேன்” என்றும்,

“புற்று அரவக் கச்சு ஆர்த்த புனிதா!” என்றும்,

“பொழில் ஆரூரா!” என்றே, போற்றா நில்லே!

(06.031.07)

என்று ஏத்திப் பணிந்திடப் பாடலைத் தந்தார்.

கூடுதலாக

பிழைத்தது எலாம் பொறுத்து அருள்செய் பெரியோய்; அடியேன் உன் அரணம் கண்டாய்; நலங்கொள் அடி என் தலைமேல் வைத்தாய்! என்றெல்லாம் ‘நாள்தோறும் நவின்று ஏத்தாய் நெஞ்சே! நன்மை ஆமே’ என்று பதிகத்தை முடித்தார்.

• வாழ்த்தலை எவ்வாறு செய்ய வேண்டும்?

இறைவனை எவ்வாறு வணங்கிப் பணிவது என்ற கேள்வி வருகிறதா? அதற்கும் பதிகத்தில் விடையுண்டு.

நெஞ்சே! அலறி, கதறி, ஏத்தி, வாழ்த்தி, சிந்தித்து, போற்றி, துதி செய்து, மலர் கொண்டு தூவிச் சூழும் வலம் செய்து தொண்டு பாடி, நேசத்தைப் பெருக்கி, நேர் நின்று உள்கி வணங்கிடு என்றார்.

• போற்றி வழிபடும் இறையுணர்வின் பயன்கள் என்ன?

இடர் கெட, தீய வினைகள் தீர, வாழ்வில் நிலைபெற, புண்ணியமும் நன்னெறியும் கிட்ட, இழைத்த நாள் எல்லை கடக்க, பல் பிறவி நீங்கிட, உய்ந்து போகிட, பாசத்தைப் பற்றறுக்க மேற்சொன்னவாறு இறைவனைப் போற்ற நெஞ்சைப் பழகச் சொன்னார் நாவுக்கரசர்.

ஒரு பதிகத்துள் எத்தனைப் பாடங்கள்! இறைவனைத் தன் நெஞ்சுள்ளே வைத்துணர்ந்து, பேரன்பும் பெரும்பணிவும் கொண்ட நாவுக்கரசரால் மட்டுமே இது இயலும்.

அப்பரைப் பாதித்த வஞ்ச நெஞ்சம்

நெஞ்சத்துள் இறைவனை வைத்து அன்பு வளர்த்த அப்பரை, அந்நெஞ் சத்து வஞ்சம் பெரிதும் பாதித்தது. அதனால்தான், வஞ்சநெஞ்சைப் புறந்தள்ள அருளுமாறு பல இடங்களில் அவர் சிவனாரை வேண்டினார்.

நெஞ்ச மென்பதோர் நீள்கயந் தன்னுளே

வஞ்ச மென்பதோர் வான்சுழிப் பட்டுநான்

துஞ்சும் போழ்துநின் னாமத் திருவெழுத்

தஞ்சும் தோன்ற அருளுமை யாறரே (05.027.03)

அடியவர்களுக்கு அறிவுறுத்த, 'வஞ்ச நெஞ்சத் தவர்க்கு வழிகொடார் நள்ளாறர்' என்றும், 'ஆமாத்தூரழகனை நெஞ்சினால் நினைத்ததும் வஞ்ச ஆறுகள் வற்றின காண்மினே,' என்றும் மேலும் முழங்கினார்.

நல்ல நெஞ்சை நினைத்து வியந்தது

நெஞ்சோடு பேசிப் புலம்பி, வருந்தி வழிகாட்டி, போற்றிப் பணிந்து வாழ்த்த நெறிப்படுத்திய நாவுக்கரசர், இறைவனைத் தன்னுள் நிறுத்திப் பயனுற்ற நெஞ்சை நினைந்து வியந்தே ஒரு பதிகம் பாடினார். அது, நான்காம் திருமுறையின் பொதுப்பதிகங்களுள் ஒன்று (04.074).

முத்தினை மணியைப் பொன்னைஞ் என்று பதிகம் முழுக்க சிவபெருமானைச் சொற்றமிழால் அரவணைத்து நெகிழ்ந்தார். ஒவ்வொரு பாடலின் இறுதி வரியிலும் அத்தனை, அன்பனை, அரும்பொனை, நிருத்தனை, நீற்றனை, நெருப்பனை, ஆதியை, அழகனை, பெருமானை, அண்ணலை, அரவனை 'நினைந்த நெஞ்ச மழகிதா நினைந்த வாறே', என்று வியந்து பாடினார்.

இறைவன் குடியிருக்கும் சரக்கறை என் நெஞ்சம் (04.111)

எல்லாவற்றிற்கும் மேலாக

ஒரு பதிகம் வைத்தார் அப்பர். 'இறைவன் இருக்குஞ் சரக்கறை யோவென் தனிநெஞ்சமே,' என்று பத்துப் பாடல்களிலும் வியந்த வண்ணமிருந்தார். அன்பால் வளர்ந்த ஆற்றலும், பணிவால் விளைந்த பொறுமையும், உழைப்பால் பெருகிய ஊக்கமும், தமிழால் பெருகிய பத்திமை வளமும் பெற்று இறையன்பில் பண்பட்டுத் தெளிந்த நெஞ்சம் அவருடையது. அதனால்தான், இறைவனுறையும் நெஞ்சை சரக்கறை என்று அவரால் வண்ணிக்க முடிந்தது. நெருக்கத்திற்குரிய அன்பனாகத் தொண்டரோடு கலந்த எளியனாக இறைவனை அழகுற இதற்குமேலும் காட்டிட இயலுமா?

இறைவனை நெருங்கும் அளவுகோல்களைச் சமூகம் முடிவுசெய்து பத்திமைக்குப் பொருள் சொன்னபோது, இறைவன் நெஞ் சிலுள்ளான் என்று இறைவனை எளியோனாகவும் பத்திமையை எளிய நெறியாகவும் உறுதிபடச் சாற்றியது அப்பரின் தனிப்பெரும் வெற்றி.

'தாயினும் நல்ல சங்கரன்' என்றும் 'அன்னையையும் அத்தனையும் போல அன்பாய் அடைந்தேனை ஆளாக்கொண்ட தென்எறும்பியூர் மலைமேல் மாணிக்கம்' என்று தாய் தந்தையினும் மேலாக அன்பைப் பொழியும் இறைவரைக் காட்டியும், தாம் இறைவன்பால் கொண்ட மட்டற்ற பேரன்பைச் சொல்லியுமே பத்திமை வளர்த்தார் அவர்.

அந்தப் பேரன்பால்தான்,

நிலைமை சொல்லுநெஞ் சேதவ மென்செய்தாய்

கலைகள் ஆயவல் லான்கயி லாயநன்

மலையன் மாமயி லாடு துறையன்நம்

தலையின் மேலும் மனத்துளுந் தங்கவே.

(05.039.06)

என்று நெகிழ்ந்துருகி நெஞ்சிடம் பத்திமைப் பேசி, அவரால் சைவம் வளர்க்க முடிந்தது.

நன்றி: டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி.

கற்குடிக்கோயில்

பகுதி–1

இரா. கலைக்கோவன்,
இயக்குநர்,
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
வரலாற்றாய்வு மையம்,
திருச்சிராப்பள்ளி

சிராப்பள்ளி சோமரசம்பேட்டைச் சாலையில் சிராப்பள்ளியிலிருந்து 8 கி. மீ. தொலைவிலுள்ளது கற்குடி. தற்போது உய்யக்கொண்டான் திருமலை என்றழைக்கப்படும் இவ்வூரின் குன்றில்தான் மூவர் பாடல் பெற்ற இறைக்கோயில் அமைந்துள்ளது. தருமபுர ஆதீனத்தின் ஆளுகையிலுள்ள இக்கோயில் சோழர் காலத்தே கற்றளியாக்கப்பட்டது. ஐந்து நிலைகளில் கட்டுமானங்களைப் பெற்றுள்ள இவ்வளாகச் சிற்பங்களும் கல்வெட்டுகளும் இக்கோயிலின் வளர்ச்சி வரலாற்றை நன்கு பதிவுசெய்துள்ளன.

முதல் நிலை

கிழக்கு நோக்கியுள்ள முதற் கோபுரவாயில் உயரமான துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் இவற்றுடனான கீழ்த் தளத்தைக் கருங்கல் கட்டுமானமாகவும் அதன் மேல் அமைந்த நான்கு தளங்கள், ஆர உறுப்புகள் ஆகியவற்றைச் செங்கல் கட்டுமானமாகவும் கொண்டுள்ளது. கீழ்த்தளத்தை நிஷ்கராந்தப் பஞ்சரங்கள் அலங்கரிக்கும் இக்கோபுரத்தில் ஏழு கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. கோபுரவாயில் வழி நீளும் நடையின் தென்புறத்தே ஞானதீர்த்தம் என்ற பெயரில் அமைந்த குளமும் வடபுறத்தே வளாகத்தின் இரண்டாம் நிலைக்கு அழைத்துச் செல்லும் படிக்கட்டுகள் பெற்ற இரண்டாம் கோபுரவாயிலும் மேற்கில் ஊர்தி மண்டபமும் அதன் பின்னே ஒருதள வேசரமாய் சண்முகர் திருமுன்னும் உள்ளன.

வள்ளியும் தெய்வானையும் ஒரு கையில் மலரேந்தி ஒரு கையை நெகிழ்த்தி நின்றகோலத்தில் காட்சி தருகின்றனர். திருமுன்னின் சுற்று முன்புறம் விரிந்து முச்சதுர, இருகட்டுத் தூண்களுடன் முன்றிலாகியுள்ளது. மண்டபம், திருமுன் முன்றில் தூண்களில் பேரளவிலான நாகபந்தம்.

மண்டபமும் திருமுன்னும்

முன்றிலும் எளிய வாயிலும் பெற்றுள்ள ஊர்தி மண்டபத்தை மதலைக்கு மேல் அமர்நிலையாளி கொண்ட 12 இந்திரகாந்த நான்முக ஒட்டுத்தூண்கள் பூமொட்டுப் போதிகையுடன் தாங்குகின்றன. அதன் பின்னுள்ள சண்முகர் திருமுன் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத் தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகளுடன் கருவறையில் வள்ளி, தெய்வானையுடனான முருகனைக் கொண்டுள்ளது. மயில்மீது சுகாசனத்தில் உள்ள முருகனின் முன்கைகள் காக்கும் அருளும் குறிப்புகளில் அமைய, பின்கைகளில் சக்தி, குறுந்தடி, வேல், வஜ்ரம் எனப் பல கருவிகள் உள்ளன.

இரண்டாம் நிலை

தரைத்தளத்திலிருந்து எழும் ஏழு படிகள் இரண்டாம் கோபுரவாயிலுக்கு வழிவிடுகின்றன. இவ்வாயிலின் வலப்புறத்தே சிறிய முன்றிலுடன் ஒருதள நாகர விமானம் பெற்று, இரட்டைப் பிள்ளையார்கள் சிறிய வடிவினர்களாய் இலலிதாசனத்தில் உள்ளனர். கோபுரவாயிலின் கீழ்த்தளம் கருங்கல் கட்டுமானமாய் உயரமான துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்று, மேலே

கர்ணகூடங்களுக்கு இடைப்பட்ட சாலையில் சிவபெருமான், உமை, அடியவர் வடிவங்களைச் சுதையில் கொண்டுள்ளது. தாங்குதள, வேதிகைக் கண்டப்பகுதியில் உருளைத் தூண்கள் காட்டப்பட்டுள்ளமை புதிய அமைப்பாகும். இக்கோபுரத்தில் சிதைந்த நிலையில் இரண்டு கல்வெட்டுகளும் பெயரழிந்த நிலையில் ஓர் அளவுகோலும் உள்ளன.

முதல் மலைச்சுற்று

தெற்குப் பார்வையாக உள்ள இவ்வாயிலின் வலப்புறத்தும் இடப்புறத்தும் குன்றின் இடைப்பகுதியில் மலைச்சுற்றுக்கான பாதை நீள்கிறது. வலப்பாதையில் சற்றுத் தொலைவு சென்றதும் மேற்கில் ஊரகத் தெய்வங்களின் திருமுன்கள் உள்ளன. அனந்தாயி அம்மன் கருவறையில் எழுவர்அன்னையர் சிற்பங்களும் ஊமைக் கருப்பண்ணசாமி திருமுன்னில் புலியுடன் கருப்பண்ணரும் மற்றொரு திருமுன்னில் காத்தவராயன், நாகப்பன், மதுரைவீரன் உருவங்களும் உள்ளன. சாமுண்டியையே அனந்தாயியாகக் கொண்டுள்ளனர். இத்திருமுன்களுக்குச் செல்லும் பாதையின் புதர்கள் அடர்ந்த பகுதியில் சற்றே சிதைந்த சோழர்

கால வராகி சிற்பமும் பின்னாளைய அய்யனார் சிற்பமும் உள்ளன.

மேற்கு, வடக்கு, கிழக்கு என முப்புறத்தும் வளரும் பாதையை அணைத்தபடி இருபுறத்தும் நெடிய மதில்கள் கோட்டைச் சுவர்களென நீள்கின்றன. அகமதில், புறமதில் போல் இருமடங்கு உயரம் பெற்றுள்ளது. ஆங்காங்கே பாறைகளின் நீட்சியைக் காணமுடியும் இப்பாதையின் தென்மேற்கில் ஊரகத் தெய்வங்களின் இருப்பருகே புறமதில் சுவர் இன்மையின், ஊருக்குள் இறங்க வழி அமைந்துள்ளது. இரண்டாம் கோபுர வாயிலிலிருந்து மேல்நோக்கி வளரும் அகலமான,

உயரக் குறைவான படிகள் மூன்றாம் கோபுரவாயிலுக்கு அழைத்துச் செல்கின்றன. இவ்வாயில் முன்னுள்ள இறுதிப் படியில் இரண்டு வரிகளில் ‘ஆண்டபெருமான் சதாசேவை’ எனும் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் நிலை

வளாகத்தின் மூன்றாம் கோபுரம் இரண்டாம் கோபுரத் தைப் போலவே கீழ்த்தளம் கருங்கல் கட்டுமானமாக அதே அமைவில் உறுப்புகள் பெற்று அமைந்துள்ளது. ஆறு கல்வெட்டுகள்5 பெற்றுள்ள இக்கோபுர மேற்றளங்கள் இரண்டும் ஆர உறுப்புகளும் கிரீவம், சிகரம் ஆகியனவும் செங்கல் கட்டுமானமாகச் சுதையுருவங்கள் பெற்று வண்ணப்பூச்சுடன் மிளிர்கின்றன. இரண்டாம் கோபுரத்தில் இடம்பெறாத கோட்டங்களை இதன் கீழ்த்தளத்தில் காணமுடிகிறது. கோட்டங்களைத் தலைப்பிட்டுள்ள மகரதோரணங்களின் குழிவுகளில் ஆடற்பெண், பிள்ளையார், யாளி முதலிய சிற்றுருவச் சிற்பங்கள் உள்ளன.

(தொடரும்)

நல்வழி பாடல்கள்

பாடல் 30

இழுக்குடைய பாட்டிற்(கு) இசைநன்று(;) சாலும்

ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று வழுக்குடைய

வீரத்தின் நன்று விடாநோய்(;) பழிக்கஞ்சாத்

தாரத்தின் நன்று தனி

விளக்கம்:

இலக்கண பிழை உடைய பாட்டு எழுதுவதை விட, உரைநடை நல்லது.

உயர் குலத்தில் பிறந்து ஒழுக்கம் தவறுவதை விட உயிரை விடுவது நன்று, திறமையில்லாத வீரத்தில் போர் களம் சென்று புறமுதுகிட்டு ஓடி உயிரை விடுவதை விட தீராத வியாதியினால் உயிர் போவது நல்லது. தவறு செய்தால் பழிநேருமே என்று அஞ்சாமல் தவறு செய்யும் பெண்ணுடன் வாழ்வதை விட தனியாக வாழ்வது நல்லது. இலக்கணப் பிழையுடைய பாட்டும், நல்லொழுக்க மில்லாத உயர்குலமும், தவறுதலடையும் வீரமும், கற்பில்லாத மனைவியோடு கூடிய இல்வாழ்க்கையும் தீரா வசையை விளைவிக்கும்

(திருவிளையாடற் புராணம் தொடர்)

ஆடலுக்கு ஆட்படுவோம்

1.சித்திரையைக் கொண்டாடுவோம்

பகுதி-3

காசி ஸ்ரீ முனைவர்
நா.ரா.கி.காளைராசன்
(மேனாள் துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம்)

விசுவாவசு வருடம், சித்திரை 16 (29.04.2025) அன்று கொடியேற்றத்துடன்மதுரையில் சித்திரைத் திருவிழாதொடங்குகிறது. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர்திருக்கல்யாணம் சித்திரை 25 (08.05.2025) அன்றும், மறுநாள் சித்திரை 26 (09.05.2025) அன்று தேரோட்டமும்நடைபெறஉள்ளன.

உலக மாந்தர்களில் சங்கம் வைத்துத் தம் தாய்மொழியை ஆராய்ந்த பெருமையுடையவர் தமிழர். சங்கம்கூடித்தமிழாய்ந்தஇடம்மதுரை. மதுரையில் கோயில்கொண்டிருக்கும் அருள்மிகு மீனாட்சி உடனாய அருள்மிகு சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களை “ஆலாசிய மகாத்மியம்” முதலான வடநூல்கள் கூறுகின்றன. வடநூல்களில் உள்ள கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தை இயற்றியுள்ளார். திருவிளையாடற் புராணம் 1. மதுரைக் காண்டம் (18 படலங்கள்), 2. கூடற் காண்டம் (30 படலங்கள்), 3. திருவாலவாய்க் காண்டம் (16 படலங்கள்) என்றுமூன்றுபெரும்பிரிவுகளில்64 படலங்களில்திருவிளையாடல் கதைகள் கூறப்பட்டுள்ளன.

இறைவன் ஆடிய திருவிளையாடலில் யார் யாரெல்லாம் இடம் பெற்றுள்ளனர்?

1)	இந்திரன்	தேவர் தலைவன்
2)	வியாழ பகவான்	தேவர்கள் குரு
3)	துவட்டா	அசுரர் குரு
4)	விசுவரூபன்	துவட்டாவின் மகன்
5)	ததீசி முனிவர்	முதுகெலும்பை வச்சிராயுத மாக இந்திரனுக்கு அளித்தவர்
6)	துர்வாச முனிவர்	அத்தி ரிஷியின் மைந்தர்
7)	குலசேகர பாண்டியன். (படலம் 3)	கடல்கோள் என்ற பெருஞ் சுனாமிக்குப் பின்னர் புனர்நிர்மாணம் செய்து மதுரையை மீண்டும் உருவாக்கி ஆண்ட பாண்டிய மன்னன்.
8)	மலயத்துவசன் (படலம் 3)	குலசேகரனின் மைந்தன்
9)	காஞ்சனமாலை	மலயத்துவசன் மனைவி. அருள்மிகு சோமசுந்தரேசுவரரின் மாமியார், இவள் நீராடும்பொருட்டு சிவபெருமான் அழைத்ததனால் ஏழுகடல்களும் மதுரை- எழுகடல்தெருவரை வந்தன.
10)	***தடாதகைப் பிராட்டி*** (படலம் 4)	மலயத்துவசன் மகள்
11)	***சுந்தர பாண்டியன்***	***அருள்மிகு சோமசுந்தரேசுவரர்***
12)	***பதஞ்சலி, வியாக்ரபரதர்***	முனிவர்கள்
13)	குண்டோதரன்	சிவகணங்களில் ஒருவர். அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணத்தில் விருந்து உண்டவர்.
14)	***உக்கிர குமாரப்பாண்டியன்*** (படலம் 11)	சுந்தர பாண்டியனின் மகன். ***அருள்மிகு சோமசுந்தரேசுவரரின் மகனான முருகப் பெருமான்.*** மதுரையை அழிக்க வந்த வங்கக் கடலை (கடல்கோள் என்ற பெருஞ்சுனாமி)யை வேல் எறிந்து தடுத்து நிறுத்திய மன்னன்.
15)	காந்திமதி	உக்கிர குமாரனின் மனைவி
16)	வீரபாண்டியன் (படலம் 17)	உக்கிரபாண்டியனின் மகன்
17)	அபிடேகப் பாண்டியன் (படலம் 18)	வீரபாண்டியன் மகன் (மதுரைக்கு நான்மடக் கூடல் என்ற பெயர் உண்டானது)
18)	விக்கிரமப் பாண்டியன் (படலம் 22)	அபிடேகப் பாண்டியன் மகன்
19)	இராசச் சேகர பாண்டியன் (படலம் 24)	விக்கிரமப் பாண்டியன் மகன்
20)	விரூபாக்கன்	ஓர் அந்தணன்
21)	சுபவிரதை	விரூபாக்கனின் மனைவி
22)	கௌரி	விரூபாக்கனின் மகள்
23)	தத்தன்	ஓர் சைவ அந்தணன்
24)	குலோத்துங்க பாண்டியன் (படலம் 25)	இராசசேகர பாண்டியனின் மகன்

	(படலம் 28)	*பசுமலை, இடபமலைகள்* இவன் காலத்தில் உண்டாகின. *இராமபிரான்* இம்மலைகளில் தங்கி அகத்தியரிடம் உபதேசம் பெற்றார்.
26)	குலபூடணப்பாண்டியன் (படலம் 30)	அனந்தகுணப் பாண்டியனின் மகன்
27)	சுந்தர சாமந்தன்	அனந்தகுணப் பாண்டியனின் சேனாதிபதி
28)	சேதிராயன்	வேடர் தலைவன்
29)	காடு வெட்டிய சோழன்	காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழ மன்னன்
30)	இராசேந்திர பாண்டியன் (படலம் 34)	குலபூடணன் மைந்தன்
31)	இராசசிங்கன்	இராசேந்திரனின் தம்பி
32)	பொன்னையாள்	திருப்பூவணத்தில் உற்சவரைத் தங்கத்தால் செய்துகொடுத்துத் திருவிழா நடத்திய நடனமாது
33)	இராசேச பாண்டியன் (படலம் 37)	இராசேந்திரன் மகன்
34)	இராசகம்பீரப்பாண்டியன் (படலம் 37)	இராசேசன் மகன்
35)	பாண்டி வமிச தீபப்பாண்டியன்(படலம் 37)	இராசகம்பீரன் மகன்
36)	புரந்திரசித்து பாண்டியன் (படலம் 37)	பாண்டி வமிச தீபன் மகன்
37)	பாண்டி வமிச பதாகப்பாண்டியன்(படலம் 37)	புரந்தரசித்து மகன்
38)	சுந்தரேச பாத சேகரப்பாண்டியன் (படலம் 37)	பாண்டி வமிச பதாகன் மகன்
39)	ஆயிரம் பரிக்கோர் சேவகன்	ஒரு சோழ மன்னன்
40)	அடியார்க்கு நல்லான்	மதுரை வேளாளன்
41)	தருமசீலை	அடியார்க்கு நல்லான் மனைவி
42)	தனபதி	மதுரை வணிகன்
43)	சுசீலை	தனபதியின் மனைவி
44)	வரகுணப்பாண்டியன் (படலம் 40)	சுந்தரேசபாத சேகரனின் மகன்
45)	ஏமநாதன்	வடநாட்டு யாழ்ப்பாணன்
46)	பாணபத்திரன்	மதுரை யாழ்ப்பாணர்
47)	சேரமான் பெருமான்	பாணபத்திரனுக்குச் சிவபெருமான் திருமுகம் கண்டு பொன்னும் பொருளும் உதவிய சேர மன்னன்
48)	இராசராச பாண்டியன் (படலம் 44)	வரகுண பாண்டியனின் மைந்தன். ***பன்றிமலை*** இவனது ஆட்சிக்காலத்தில் உருவானது.
49)	சுகலன்	குருவிருந்த துறையில் வாழ்ந்த ஒரு வேளாளன்
50)	சுகலை	மனைவி சுகலன்
51)	சுகுணப் பாண்டியன்	இராச இராச பாண்டியனின் மைந்தன்

	(படலம் 47)	
52)	வாங்கிய சூடாமணி	வங்கிய சேகர பாண்டியனின் மைந்தன்
53)	தருமி	ஒரு சைவ வேதியன்
54)	நக்கீரர்	சங்கப் புலவர்களுள் தலைமை புலவர்
55)	உருத்திர சருமர்	தனபதி குணசாலினி ஆகியோரின் ஊமை மைந்தன்
56)	இடைக்காடன்	கபிலரின் நண்பன்
57)	அரிமர்த்தனன்	குலேச பாண்டியனின் மகன்
58)	திருவாதவூரர் (மாணிக்கவாசகர்)	அரிமர்த்தனபாண்டியனினின் அமைச்சர்
59)	மங்கையர்க்கரசி	கூன்பாண்டியனின் மனைவி
60)	வந்தி	மதுரையில் வாழ்ந்த முதியவள்
61)	(படலம் 49) ***சித்திரரதன்,*** சித்திரபூடணன், சித்திரத்துவசன், சித்திரவருமன், சித்திரசேனன், சிந்திரவிக்கிரமன், இராசமார்த்தாண்டன், இராச சூடாமணி, இராச சார்த்தூலன், துவிசராசகுலோத்தமன், ஆயோதனப் பிரவீணன், இராச குஞ்சரன், பரவிராச பயங்கரன், உக்கிரசேனன், சத்ருஞ்சயன் வீமரதன், வீம பராக்கிரமன், பிரதாப மார்த்தாண்டன், விக்கிரம கஞ்சனன், சமர கோலாகலன், ***அதுல கீர்த்தி பாண்டியன்***	சுகுணபாண்டியனுக்குப் பின்னர் வழி வழி வந்து தோன்றிய பாண்டிய மன்னர்கள்
62)	கீர்த்திவீடணப்பாண்டியன்	அதுலகீர்த்தியின் மகன். இவனது ஆட்சிக் காலத்தில் ***பிரளயம்*** ஏற்பட்டு ஏழுகடல்களும் பொங்கி எழுந்து (பெருஞ் சுனாமி) உலகை அழித்தன.*மதுரையில் சோமசுந்தரப் பெருமான் விமானமும் மீனாட்சியம்மன் ஆலயமும், இடப மலையும், யானை மலையும், நாகமலையும், பசுமலையும், பன்றி மலையும் மட்டும் அழியாமல் இருந்தன.பிரளயத்திற்குக்குப் பின்னர், சந்திர குலத்தில் பாண்டியரும், சூரிய குலத்தில் சோழரும், அக்னி குலத்தில் சேரரும் தோன்றி ஆட்சி செய்தனர்.*
63)	வங்கியசேகரப்பாண்டியன் (படலம் 50)	பிரளயத்திற்குப் பின்னர் சந்திரகுலத்தில் சந்திர குலத்தில் தோன்றிய பாண்டிய மன்னன்.

		இன்றைய மதுரை நகரைப் பண்டைப் பெருமை விளங்கும் வகையில் உருவாக்கியவன். மதுரை மாநகரம் *ஆலவாய் நகரம் என்ற பெயர் பெற்றது. கபிலர் பரணர் முதற்றான 48 சங்கப்புலவர்கள் தோன்றினார்கள்.*
64)	விக்கிரமசோழன்	வங்கிய சேகர பாண்டியன் மீது படையெடுத்து வந்த சோழ மன்னன்.
65)	வங்கிய சூடாமணி என்ற சண்பக பாண்டியன் (படலம் 52)	வங்கிய சேகரனின் மகன்.
66)	பிரதாப சூரியன், வங்கிசத் துவசன், இரிபுமருத்தனன் சேரவங்கி சாந்தகன், பாண்டிவங்கி சேசன், வங்கிச்சிரோன்மணி, பாண்டீச்சுரன், குலத்துவசன், வங்கிச வீபூடணன், சோம சூடாமணி, குல சூடாமணி, இராச சூடாமணி, பூப சூடாமணி, குலேச பாண்டியன்	சண்பக பாண்டியனுக்குப் பின் வழி வழி வந்து ஆட்சி செய்த பாண்டிய மன்னர்கள் (படலம் 56)
67)	அரிமர்த்தன பாண்டியன் (படலம் 58)	மாணிக்கவாசகரை அமைச்சராகக் கொண்ட மன்னன்.
68)	அரிமர்த்தன பாண்டியனுக்குப் பின் பல மன்னர்கள் பாண்டிய நாட்டை ஆண்டனர்.(படலம் 62)	
69)	கூன்பாண்டியன்	சேரனையும் சோழனையும் வென்று பேரரசனாகத் திகழ்ந்தவன். திருஞானசம்பந்தரால் வெப்ப நோய் நீங்கப்பெற்ற பாண்டிய மன்னன்
70)	குலச்சிறையார்	கூன்பாண்டியனின் அமைச்சர்
71)	மங்கையர்க்கரசியார்	கூன்பாண்டியனின் மனைவி
72)	வன்னிமரம், கிணறு, சிவலிங்கம்	வணிகனின் திருமணத்திற்குச் சாட்சியாய்த் தோன்றியவை (படலம் 64)
73)	உலோபாமுத்திரை	அகத்தியரின் மனைவி,திருவிளையாடல்களைக் கேட்டவர்களில் ஒருவர்
74)	வசிட்டர்	திருவிளையாடல்களைக் கேட்ட முனிவர்களில் ஒருவர்

இவ்வாறு 64 திருவிளையாடல்களில் 74 துணைக் கதாப்பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் இறைவன் ஆடிய திருவிளையாடல்களுக்குத் துணை நின்றோர். எம்பெருமானை அவனது ஆடலைக் கண்டு மகிழ்ந்தவர்கள்.

மல்குக வேத வேள்வி வழங்குக
சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கம் பரவுக
அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம்
நான்மறைச் சைவம் ஒங்கி
புல்குக உலக மெல்லாம் புரவலன்
செங்கோல் வாழ்க.

தொடரும்

தினசரி வாழ்க்கைக்குத் திருபுகழ்





டாக்டர் ஜெயபாலன் வள்ளியப்பன்,
ஈப்போ, மலேசியா

ஆன்மீகம் என்பது இறைத்தன்மையை நோக்கிய ஆன்மாவின் பயணம். நம்முடைய சமய நூற்கள் இந்தப் பயணத்தில் நம்மை சரியான இலக்கை நோக்கிச் செல்ல வைக்கும் வழிகாட்டிகள். இவை, நமக்கு முன்னே சென்ற குருமார்கள் எழுதி வைத்த அனுபவங்கள்.

இந்த அனுபவங்கள் ஆன்மீகத்திற்கு மட்டுமா வழிகாட்டுபவை? இல்லையில்லை. நம் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தனையும் நம்முடைய திருமுறைகளிலும், திருப்புகழிலும் ஆழ்வார் பாசுரங்களிலும் கொட்டிக் கிடக்கின்றன.

உலக இன்பத்தை நோக்கிய நம்முடைய அன்றாட வாழ்க்கையின் இன்னொரு பெயர் லௌகீகம். உலகியல் இன்பங்களும், துன்பங்களும் இந்த லௌலீக வாழ்க்கைப் பயணத்தின் அனுபவங்கள். இந்த ஆன்மீக அனுபவங்களும், லௌகீக அனுபவங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையல்ல. இரண்டும் என்றைக்கும் சேராத தண்டவாளங்களல்ல. மாறாக, இந்த இரண்டு அனுபவங்களும் ஒன்றையொன்று சார்ந்தவை.

காய்கனி துய்த்துங் காயமெ றுத்துங் காசினி முற்றும் திரியாதே

சீ வ னொ டு க் க ம் பூதவொடுக்கம் தேற வுதிக்கும் பரஞான

தீப விளக்கங் காணஎ னக்குன் சீதள பத்மம் தருவாயே!

(சிதம்பரத் திருப்புகழ் ஸ்ரீ பா.497)

இறைவனிடம் உள்ளன்பிலாத வெறும் வேடத்தால் பயனில்லை. ”ஆன்மீக வெற்றி” என்பது இறைவனின் திருவடிப் பேறு. அந்தப் பேற்றினைப் பெறுவதற்கு முதல் படி உண்மையான உள்ளன்பு. இந்த அன்பு இல்லாமல் புற வேடங்களை மட்டுமே நம்பியிருப்பதில் பயனில்லை.

மனம், புத்தி, சித்தம் என்ற சீவனொடுக்கமும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து புலன்களைக் கட்டுப்படுத்திய பூதவொடுக்கமும் ஒருவருக்கு அமைந்துவிடின் அவருக்குப் பரஞானம் வாய்க்கும். இந்தப் பரஞானம் வாய்த்தவர்க்கு, உள்ளன்பு தீபமாகத் தோன்றும். உள்ளத்தில் அன்பெனும் தீபம் தோன்றிடின், இறைவனின் திருவடி பேறு கிட்டும். இப்படி, எளிமையான வழிகளால் இறைவனை அடையலாம். இல்லறத்தில் இருந்துகொண்டே லௌகீகமாகிய இந்த உலக வாழ்க்கையில் இருந்துகொண்டே, ஆன்மீக அனுபவத்தை அடைவதைத்தான் இந்து மதம் வலியுறுத்துகின்றது.

நமக்கு விதிப்பயனாக அமைந்தது இந்த உலக வாழ்க்கை. இந்த லௌகீக வாழ்க்கையை நேர்பட வாழும் ஒருவன், இறை அனுபவத்தைப் பெறுவதைத்தான் நம்முடைய ஆன்மீக நூல்கள் சொல்லுகின்றன. சிதம்பரத் திருப்புகழில் ஒரு பாடல்

”காவி யுடுத்துந் தாழ்சடை வைத்துங் காடுகள் புக்குந் தடுமாறிக்

இராமாயணம், திருப்புகழ் போன்ற ஆன்மீக நூல்கள் சொல்லும் நெறிகளை அன்றாட வாழ்கையிலும் பொருத்திப் பார்க்க வேண்டும். லௌகீக வாழ்க்கைக்குப் பயனில்லாத இலக்கியங்கள், ஒரு கட்டத்தில் பொருளற்றதாக ஆகிவிடும். இந்த ஆன்மீக இலக்கியங்களைப் பற்றிப் பேசுபவர்கள் எழுதுபவர்கள் எப்படி தினசரி வாழ்க்கையில் மக்கள் பயனடையலாம் என்பதையும் சொல்ல வேண்டும். ஆகவே, நம்முடைய கோவிலூர் சுவாமிகளின் திருவுளப் பாங்கின்படி, இனிவரும் ”திருநெல்லை”மின்னிதழ்களில், ”தினசரி வாழ்க்கைக்குத் ஆன்மீக வெற்றி பெறலாம் என்பது திருப்புகழ் காட்டும் நெறி.

திருப்புகழ் காட்டும் இந்த எளிய நெறிகளை அன்றாட வாழ்க்கையில் நாம் கடைபிடித்தால், இந்த உலகியல் வாழ்க்கையிலும் நாம் வெற்றி பெறலாம்.

திருப்புகழ் ஒரு வழிபாட்டு நூல் மட்டுமல்ல. நம்முடைய லௌகீக வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூலாக நாம் கொள்ள வேண்டும். இக்கருத்தையே நம் கோவிலூர் குருமகா சன்னிதானமும் அடிக்கடி வலியுறுத்திச் சொல்லுவார்கள்.

திருப்புகழ்” என்ற பொருண்மையில் சிந்திக்க இருக்கிறோம்.

ஆறுமுகனையும், அழகிய வேலையும், அவன் ஏறும் மயிலையும் கூறும் திருப்புகழை, நம் வாழ்விலும் பொருத்தி வளம் பெறுவோம். வாரீர்.

அடுத்த இதழில் சந்திப்போம்

வ.ஜெயபாலன்

கோவிலூர் ஆதீன வெளியீடுகள்
கோவிலூர் புதையல்கள் - 19

கோவிலூர்க் குசுமாஞ்சலி

- நூல் அறிமுகம்

- கு. அன்பு மெய்யப்பன்,
உதவிப் பேராசிரியர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி - 3.

கோவிலூர் குசுமாஞ்சலி என்றும் நூல்பல பாடல்களின் தொகுப்பு நூலாக அமைந்துள்ளது. கோவிலூர் கிளை மடமான கோ. சித. மடத்தின் பீடாதிபதியான சீர் வளர் சீர் சிதம்பர ஞான தேசிக சுவாமிகளின் மாணாக்கர் சி. சுப்பையா சுவாமிகளால் திரட்டப்பட்ட, இயற்றப்பட்ட பாடல்களால் இந்நூல் அமைந்துள்ளது. பல ஞான நூல்களில் உள்ள தகவல்களை ஒரே நூலில் உணரும் பொருட்டு இன்றியமையாத சில மந்திரங்களைச் சேர்த்து இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

1971இல் கோவிலூரின் எட்டாம் பீடாதிபதியாக இருந்த சீர் வளர் சீர் சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகளால், காரைக்குடி சௌத் இந்தியா பிரசில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. 114 பக்கங்களாக அமைந்துள்ளது.

தொடக்கமாக, ஆதி சங்கராச்சாரிய சுவாமிகளின் திருவுருவப்படமும், கோவிலூர் ஆண்டவரின் திருவுருவப்படமும், சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகளின் திருவுருவப் படமும் அமைந்துள்ளன.

இரண்டாம் பதிப்பாக அமைந்துள்ள இந்நூலின் முதற்பதிப்பு, ஆறாம் பட்டம் சீர்வளர் சீர் அண்ணாமலை ஞானதேசிக

சுவாமிகளின் காலத்தில், காரைக்குடி சா. நா.சா. குடும்பத்தாராலும் அளிக்கப்பட்ட நிதிஉதவி கொண்டு, 1921இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

நூலுக்கான தேவை மற்றும் பெயர் விளக்கம்

இந்நூலின் முகவுரையில்,உலக வாழ்வில் மக்கள் அனைவரும், மனைவி மக்கள் முதலியவற்றில் இன்பம் இருப்பதாகக் கருதி, அவற்றை அடைந்து இன்பம் தேட முற்படுகின்றனர். குடும்பத்தைக் காப்பதற்காக இரவு பகல் பாராது தொழில் புரிந்து துன்பமடைகின்றனர். அதனால் கானலை நீரென்று கருதி அருகில் ஓடி, நீரைக் காணாது ஏமாற்றம் அடைவதைப் போல், தங்கள் வாழ்வின் இன்பத்தைத் தொலைத்துச் சொல்ல முடியாத துயரடைகின்றனர். அத்தகைய வாழ்வில் உண்டாகும் துன்பங்களை நீக்கும் வழி அறிந்தவர்களே, சிறந்த ஞானாசிரியர்களை அடைகின்றனர். அத்தகைய ஞானாசிரியர்களைக் கொண்டது கோவிலூர்த் திருமடமாகும்.அம் மடத்தில் 16 வேதாந்த பாடங்களை அவர்கள் போதித்து வருகிறார்கள்.

16 வேதாந்த நூல்களையும் கற்பதற்கு அடிப்படையாகச் சில சிறு நூல்களைக் கற்க வேண்டியது அவசியமாகிறது. அத்தகைய நூல்களில் ஒன்றே இந்தக்கோவிலூர்க் குசுமாஞ்சலி என்னும் இந்நூலாகும் என்று விளக்குகிறது.

கோவிலூர் ஆதீனப் பரம்பரைக்கு உட்பட்ட மடத்து ஞானாசிரியர்களைப் பாக்களாகிய பூக்களைக் கொண்டு, வணங்குதல் என்பதே, கோவிலூர் குசுமாஞ்சலி என்று பெயருக்கான விளக்கமாகக் கூறப்படுகிறது.

நூலின் தொடக்கமாக, நூலின் ஆசிரியர் மற்றும் நூலின் சிறப்புகளை விளக்கும் விதமாகச் சாத்துக் கவிகளை, கோவிலூர் மடத்தின் மாணாக்கராகிய மகா. சோமசுந்தர ஐயா அவர்கள் அறுசீர்க் கழிநெடிலடி விருதப்பாக்களாக யாத்துள்ளார்.

சிறப்புப் பாயிரத்தை திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் புலவர் க.அ. இராமசாமிப்புலவர் இயற்றியுள்ளார்.

நூலின் அமைப்பு

ஏழு பகுதிகளாக இந்நூல் அமைகிறது.

1.ஆதி சங்கரரின் சரித்திரச் சுருக்கம்

2.கோவிலூர் அதீனப் பரம்பரை விளக்கம்

3.அருச்சனை நாமங்கள்

இப்பதியில், விநாயகர்,

முருகன், சிவபெருமான், அம்பிகை விஷ்ணு, இலக்குமி, சரசுவதி, தாண்டவர்(சிவபெருமானது தாண்டவ வடிவங்கள்), சங்கராச்சாரிய சுவாமிகள், நந்திகேசுவரர் ஆகியோரைப் பற்றிய பல நாமங்களை துதிக்கும் விதம் பாடல்கள் அமைந்துள்ளன.

4.தோத்திரங்கள்

1. குரு தோத்திரங்கள் என்னும் இப்பகுதியில், உகந்தலிங்க ஞானதேசிகர், கோவிலூர் ஆண்டவர், அருணாச்சல ஞானதேசிகர், சிதம்பர ஞானதேசிகர், இராமசாமி ஞான தேசிகர், வீரசேகர ஞான தேசிகர், அண்ணாமலை ஞானதேசிகர், மகாதேவ ஞானதேசிகர், ஈசானிய ஞானதேசிகர், பொன்னம்பல ஞானதேசிகர், தெட்சணாமூர்த்தி ஞானதேசக சுவாமிகள் பற்றிய தோத்திரங்கள் அமைந்துள்ளன.

2. மடாலயங்களின் பஞ்ச மூர்த்திகள் துதி என்னும் அடுத்த பகுதியில், கோவிலூர் மடம் மற்றும் அதன் கிளை மடங்களின் பஞ்ச மூர்த்திகளைத் தொழும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. 1. சிவபெருமான், 2. அம்பிகை, 3. விநாயகர், 4. முருகன், 5. சண்டிகேசுவரர் என்பவர்களே பஞ்ச மூர்த்திகளாகக் கூறப்படுகிறார்கள். இப்பாடல்களில் சண்டிகேசுவரருக்குப் பதில் மடங்களைத் தோற்றுவித்தவர்கள் சொல்லப்படுகிறார்கள். 13 கிளைமடங்களை இதன் வழி அறியமுடிகிறது.

3. விநாயகர் கவசம் என்னும் பெயரில் பாடல்கள் அமைந்துள்ளன.

4. பஞ்ச புராணம் என்னும் பகுதியில், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகியவற்றிலிருந்து தேவையான பாடல்கள் தொகுக்கப்பட்டு இப்பகுதியில் அமைந்துள்ளன.

5. சீடாசாரம்

இப்பகுதியில், விநாயகர் காப்புப் பாடலோடு, விருத்தப்பாக்களாக 50 பாடல்கள் அமைந்துள்ளன.

சீடாசார சூசனம் என்னும் தலைப்பில், குருவின் லட்சணம், சீடனது லட்சணம், குரு சேவையின் பலன், குருசேவையின் கிரமம் என்னும் உட் தலைப்புகளில் குரு மற்றும் சீடர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது விளக்கப்படுகிறது.

6. புருஷார்த்தப் பிரகரணம்

புருஷார்த்தம் என்றால் “மனித நாட்டத்தின் பொருள்” என்று பொருள்கொள்ளலாம். மனித வாழ்க்கையின் நான்கு

இறுதி இலக்குகளை இப்பகுதி, நத்தியாநித்திய வஸ்து, இகரமுத்திராா்த்த பலபோக விராகம், சமரதிஷட்க சம்பத்தி, முமுக்ஷுத்துவம் என்னும் தலைப்பில் விளக்குகின்றன.

7. குருசமாதி ஆலய பூஜா தந்திர மந்திரங்கள்

குருக்களின் சாமாது ஆலயங்களுக்குச் சென்று, எவ்வாறு, எத்திசை நோக்கி அமா்ந்து, மந்திரங்களை எவ்விதம் சொல்ல வேண்டும் என்பதை விரிவாக இப்பகுதி விளக்குகிறது. சமக்கிருத மந்திரங்களின் தமிழ் உச்சரிப்புகளையும் தெளிவாக இப்பகுதி விளக்குகிறது.

தெய்வப் பாடல்களால் ஈசுவரன் அருளையும், சீடாசாரம் பகுதியால் குருவின் அருளையும், புருஷாா்த்தப் பகுதியில் இராகத்துவேஷாதிகள் (கோபம்) காரணமாக வருகின்ற துன்பங்களை நீக்கி மனதைத் தூய்மைப்படுத்துகின்ற அந்தகரணச் சுத்தியையும், ஞானமளிக்கும் ஞான நூற் பயனையும், இவற்றின் மூலம் மோட்சத்தைப் பெறுவதற்கான நான்கு வகையான அருள்களையும் ஒருங்கே தருவதாக இந்நூல் அமைவது இதன் சிறப்பு என்றால் மிகையில்லை.

நல்வழி பாடல்கள்

பாடல் 31

இழுக்குடைய பாட்டிற்(கு) இசைநன்று(;) சாலும்

ஒழுக்கம் உயா்குலத்தின் நன்று – வழுக்குடைய

வீரத்தின் நன்று விடாநோய்(;) பழிக்கஞ்சாத்

தாரத்தின் நன்று தனி

விளக்கம்:

இலக்கண பிழை உடைய பாட்டு எழுதுவதை விட, உரைநடை நல்லது.

உயா் குலத்தில் பிறந்து ஒழுக்கம் தவறுவதை விட உயிரை விடுவது நன்று, திறமையில்லாத வீரத்தில் போா் களம் சென்று புறமுதுகிட்டு ஓடி உயிரை விடுவதை விட தீராத வியாதியினால் உயிா் போவது நல்லது. தவறு செய்தால் பழிநேருமே என்று அஞ்சாமல் தவறு செய்யும் பெண்ணுடன் வாழ்வதை விட தனியாக வாழ்வது நல்லது. இலக்கணப் பிழையுடைய பாட்டும், நல்லொழுக்க மில்லாத உயா்குலமும், தவறுதலடையும் வீரமும், கற்பில்லாத மனைவியோடு கூடிய இல்வாழ்க்கையும் தீரா வசையை விளைவிக்கும்

காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம் - 22

பிறையும் பாம்பும்

- வாகீச கலாநிதி
கி.வா. ஜகந்நாதன்

காரைக்கால் அம்மையார் இறைவனிடம் நெருங்கி அன்பு செய்யும் பேரன்புடையவர். அன்பர்கள் இறைவனுடன் நெருங்கிப் பேசும்போது பலவகையில் அசதியாடுவதுஷெ பரிகாசமாகப் பேசுவதுஷெஉண்டு. அப்பர் சுவாமிகள், சுந்தர மூர்த்தி நாயனார் முதலியவர்களின் திருவாக்கிலும் இப்படி வேடிக்கையாகப் பேசும் பாடல்கள் உண்டு. காரைக்கால் அம்மையாரும் அவ்வாறு பேசும் இயல்புடையவர். முன்பு ஒரு பாட்டில், “ஐயோ! இந்தப் பாம்பை இறைவனுடைய மார்பில் சேரும்படி செய்யாதீர்கள்! அது உமாதேவியை ஏதாவது செய்துவிட்டால்? அது மகா பாவம்“ (13) என்று சொன்னதைப் பார்த்தோம். இறைவனையே முன்னிலைப் படுத்தி அசதியாடும் இடங்களும் உண்டு.

இப்போது அத்தகைய பாடல் ஒன்று வருகிறது.

இறைவன் பிறையை அணிந்திருக்கிறான். பாம்புகளை அணிகலனாகப் பூண்டிருக்கிறான். பொதுவாகச் சந்திரனுக்கும் பாம்புகளுக்கும் பகை என்று சொல்வார்கள். கிரகணக் காலத்தில் இராகு கேதுக்கள் சந்திரனை விழுங்குவதாகக் கொள்வது உலக வழக்கு. அதிலிருந்து உண்டானது இந்த எண்ணம். பாம்புக்கும் சந்திரனுக்கும் பகை என்று சொல்லி அதனடியாகப் பல கற்பனைகளை அமைப்பது கவிஞர்களின் வழக்கம். இப்படி வரும் கவிஞர் மரபுகளைக் கவிசமயம் என்பார்கள். இயற்கை யிலே இப்படி நடக்கும் என்று நாம்

முன்னிலைப் படுத்துகிறார். அம்மையார் அடிக்கடி இறைவனை அம்மையார் அடிக்கடி நீலகண்டன் என்று குறிப்பதை நாம்பார்த்து வருகிறோம். தேவர்கள் உய்யவும் வயிற்றில் உள்ள உயிர்கள் உய்யவும் நஞ்சைத் திருக்கழுத்திலே 'இறைவன் தேக்கி வைத்தான். அந்தக்

எண்ணக் கூடாது. இவை யாவும் கற்பனை. அடிப்பட்ட வழக்கு ஆதாரமாக இருப்பதனால் இந்தக் கற்பனை நமக்கு விளங்குகிறது. இந்தப் பொய்யை தீமையில்லாத பொய்யை நாம் சுவைக்கிறோம்.

பாம்பையும் சந்திரனையும் வைத்துக்கொண்டு காரைக்கால் அம்மையார் இப்போது அசதியாடுகிறார். இறைவனை நோக்கியே பேசுகிறார்.

"எம்பெருமானே! உம்முடைய திருக்கழுத்து மிகவும் கறுப்பாக இருக்கிறது. அது உம்முடைய கழுத்தில் வந்து தன்னுடைய இயல்பாகிய நிறம் பின்னும் கறுப்பாகிக் கட்டி தட்டித் தங்கியிருக்கிறது என்று சொல்லும்படி உள்ளது. அத்தகைய கண்டத்தை உடையவரே!" இறைவனை

கருணை மிகப்பெரியது.

"புவனங்கள் உய்ய ஐயர்
பொங்குநஞ்சு உண்ண யாம்செய்
தவம்நின்று தடுத்த தென்னத்
தகைந்துதான் தரித்த தென்று
சிவன்எந்தை கண்டந் தன்னைத்
திருநீல கண்டம் என்பார்"

என்று அந்தத் திருக்கழுத்தைச் சிறப்பிப்பார் சேக்கிழார்.

வந்துஓர்.
இராநீர் இருண்டனைய கண்டத்தீர்

என்று இறைவனை விளிக்கிறார்.

இரவு கதிரவன் வந்தவுடன் போய்விடுகிறது. ஒவ்வொரு நாளும் வந்து வந்து போகிறது. எங்கேனும் நிலையாக இருந்து இளைப்பாற இடம் கிடைக்குமா? என்று நாடிப் பார்த்து,

'இந்த இடந்தான் நிலையாக இருக்கத் தக்க இடம். இங்கே யாரும் வந்து துன்புறுத்தமாட்டார்கள். நம்முடைய இயல்பாகிய இருட்டு இங்கே முதிர்ந்து விளையும்படி தங்கி விடலாம் என்று இறைவன் திருக்கழுத்தைத் தேர்ந்தெடுத்தது. ஆகவே அங்கே வந்து, தன் நீர்மை பின்னும் நன்றாக இருண்டு அமையும்படி இரவு தங்கிவிட்டதாம். இப்படிக் கற்பனை பண்ணும்படி இறைவன் திருக்கழுத்து அமைந்திருக்கிறது. 'இரவின் நீர்மையாகிய இருள் பின்னும் இருண்டாற் போன்ற திருக்கழுத்தை உடையவரே!' என்று விளிக்கிறார். இத்தகைய கண்டத்தையுடைய எம்பெருமானரே!" என்கிறார்.

வந்துஓர் இராநீர் இருண்டனைய கண்டத்தீர்! எங்கள் பிரானீர்!

கழுத்திலே இரவின் இருளைப் போன்ற கருமை இருந்தாலும் இறைவன் தன் சென்னியிலே பிறையை அணிந்திருக்கிறான். இரவும் பிறையும் இணைந்திருப்பது உலக இயல்பு. இங்கே இரவின் இருள் ஒரு பக்கம் ஒதுங்கியிருக்கிறது; பிறை ஒரு பக்கம் இருக்கிறது. அந்தப் பிறை இறைவனிடம் அடைக்கலம் புகுந்தது. தக்கன், "நீ தேய்ந்து மாய்ந்து போவாயாக" என்று சாபம் இட்டான். அது கண்டு சந்திரன் இறைவனிடம் அடைக்கலம் புகவே, அவனைத் தன் தலையிலே எடுத்து அணிந்து கொண்டான். அது முதல் அவன் தேயாமல் வளராமல் என்றும் ஒரே நிலையில் இருக்கிறான். வளர்வதும் தேய்வதும் இல்லாத சிரஞ்சீவித் தன்மையைப் பெற்று விட்டான்.

இப்போது அந்தப் பிறைக்கு ஆபத்து வந்துவிடும் போலல்லவா இருக்கிறது? அச்சத்தினால் பேசுகிறவர்கள் முன் பேசுவதைப் பின்னும், பின் பேசுவதை முன்னும் பேசுவார்கள்; "போச்சு, போச்சு!" என்று கத்துவார்கள். எது போயிற்று என்று விளங்காது. பிறகுதான் விளங்கும். அவ்வாறே, அம்மையார் சொல்லத் தொடங்குகிறார். முதலில் சிவபெருமானை விளிக்கவில்லை.

"ஐயோ! இதற்கு ஆபத்து வந்துவிடும்போல் இருக்கிறதே!" என்று தொடங்குகிறார், "எதற்கு ஆபத்து? யாரால் ஆபத்து வந்து இதைச் சாப்பிட்டுவிடும் போல இருக்கிறதே!" என்கிறார்.

வந்து இதனைக் கொள்வதே ஒக்கும்!

எதைக் கொள்ளும்? எதுகொள்ளும்?

'உம்முடைய திருமேனியிலே தேவரீர் அணிகலனாக அணிந்திருக்கிறீரே, அந்தப் பாம்பைத்தான் சொல்கிறேன். அது வாள் அரவு; கொலை செய்யும் அரவு அல்லவா?"

"இந்தப் பாம்பு அப்படிச் செய்யாது."

"நான் நம்ப மாட்டேன். பாம்பு என்றால் படையும் நடுங்கும். பாம்புக்கும்

பிறைக்கும் பகை என்பதை உலகம் அறியும்; ஆகவே இந்தப் பாம்பு நல்ல பாம்பு என்று நான் நம்பமாட்டேன். இது எந்தச் சமயத்தில் ஆபத்தை உண்டாக்குமோ? இதன் திருட்டுப் புத்தியைத் தேவரீர் நன்றாக ஆராய வேண்டும். ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வாருங்கள்.”

இவ்வாளரவின்

சிந்தையது தெரிந்து காண்மினோ?

எதற்கு ஆபத்து? இதனைக் கொள்வதே ஒக்கும்‘ என்று சுட்டியது எதனை? அதை உடனே சொல்லவில்லை. இறைவனை விளித்துவிட்டுப் பிறகே அதைச் சொல்கிறார். “நீலகண்டப் பெருமானே! உம்முடைய திருமேனியில் உள்ள பிறையைத் தான் சொல்கிறேன்” என்று முடிக்கிறார்.

வந்து ஓர் இராநீர் இருண்டனைய கண்டத்தீர்! எங்கள்

பிரானீர்! உம் சென்னிப் பிறை.

அச்சத்தால் உண்டான படபடப்பும் தடுமாற்றமும் முன்பின் மாற்றிக் கூறும் குழப்பமும் இந்தப் பாட்டில் இருக்கின்றன.

வந்துஇதனைக் கொள்வதே ஒக்கும்; இவ்வாளரவின்

சிந்தை யதுதெரிந்து காண்மினோ;ஷெவந்து ஓர்

இராநீர் இருண்டனைய கண்டத்தீர் !எங்கள்

பிரானீர்! உம் சென்னிப் பிறை.

பாம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அது உம்மிடம் புகல் அடைந்த பிறையை விழுங்கினாலும் விழுங்கி விடும்‘ என்று அசதியாடுகிறார் அம்மையார்.

இது அற்புதத் திருவந்தாதியில் வரும் 22ஆம் பாடல்.

விஸ்வேஸ்வரருக்குப் பிடித்த ஆனந்தவனம்

தேனம்மை இலக்குமணன்,
காரைக்குடி

காசி ஆனந்தவனம். ஒருமுறை இந்த ஆனந்தவனத்திலிருந்து ஒரு வேண்டுகோளினால் மந்த்ராசலத்துக்குத் தன் இருப்பிடத்தை மாற்றிக் கொண்டார் விசுவநாதர். எங்கும் உறையும் இறைவனே ஆனாலும் தனக்குப் பிடித்த இடத்தில் கோவில் கொள்வதைத்தான் விரும்புவார் என்பதை காசி மாநகருக்கே அவர் திரும்பி வந்த கதை உணர்த்துகிறது.

பத்ம கல்பத்தின்போது உலகெங்கும் வறட்சி ஏற்பட்டதால் உயிரினங்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டன. படைப்புக் கடவுள் பிரம்மாவுக்கே இனித் தான் படைக்கும் தொழிலில் ஈடுபட முடியுமா என்று நினைக்கும் அளவில் புதிய உயிர்களைத் தோற்றுவிப்பது கடினமாக இருந்தது. அந்த அளவு அழிவின் விளிம்பில் அனைத்து உயிர்களும் துன்பப்பட்டன.

ஆனந்தவனம் என்னும் காசியும் அதற்கு விதி விலக்கல்ல. இதைக் காப்பாற்ற வல்லவன் யார் என்று பிரம்மா தேடினார் அப்போது ரிபுஞ் செயன் என்னும் மன்னன் மிகுந்த அர்ப்பணிப்புடன் தவத்தில் ஈடுபட்டு வருவதை அறிந்தார். இவன் தான் காசி நகரைக் காப்பாற்ற வல்லவன் என்று பிரம்மா எண்ணினார். தான் தேர்வு செய்த மன்னனுக்குத் திவோதாசா என்று பெயரிட்டு அவனைக் காசிக்கு மன்னனாக இருக்கும்படி கூறினார்.

அவன் இதனை ஏற்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை என்றான் அவன். நான் காசியில் அரசனாக வீற்றிருக்கும் காலம் வரை அங்கே தேவர்களும் மற்றைய கடவுளர்களும் காசியிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்பது அவன் விதித்த நிபந்தனையாகும். இதனைப் பிரம்மனும் ஒப்புக் கொண்டு

தங்கள் ஆன்மீகச் சாதனையைச் சிறந்த முறையில் செய்ய உறுதுணையாக இருக்கவேண்டும் எனப் பிரம்மா கேட்டுக் கொண்டதற்கிணங்க, அரசனும் உதவிகள் செய்தான். காசியில் ஓர் அஸ்வமேத யாகம் செய்யவேண்டும் எனப் பிரம்மா விரும்பியபோது பத்து அஸ்வமேத யாகம் செய்வதற்குரிய ஏற்பாடுகளை இந்த மன்னன் செய்து கொடுத்தான். இங்ஙனம் அனைத்துத் தேவர்களையும் காசியை விட்டு விலகித் தங்கள் நகரான அமராவதிக்குச் செல்லும்படி கூறினார். சிவபெருமானை அவ்விதம் கேட்கப் பிரம்மா தயங்கினார். அந்நேரத்தில் மந்த்ராசலம் என்னும் மலை சிவபெருமானிடம் தன்னிடம் வந்து குடும்பத்தோடு தங்கியிருக்கவேண்டும் எனச் சிவபெருமானிடம் வேண்டுகோள் வைத்தது. இதனால் சிவபெருமானும் மந்த்ராசலத்துக்கு இடம் பெயர்ந்தார். திவோதாசாவும் காசிக்கு அரசனாக ஆனான். காசியின் வறட்சி மாறியது. வளம் பெற்றது.

திவோதாசாவிடம் காசிக்கு வருபவர்களும் வசிப்பவர்களும் அவனது இனிமையான ஆட்சியில் ஆனந்தவனம் செழித்தது. உலகம் உய்ந்தது. இருப்பினும் காசியில் விசுவநாதர் இல்லாத குறையைக் குறையாகவே இருந்தது.

இந்தக் குறையை அறியாமல் இருந்தான் திவோதாசா. அவனுக்கு அக்குறையைத் தெரிவிக்கும் நேரம் வந்தது. அவனுக்குச் சிவ சிந்தனையை ஏற்படுத்தக் காலம் முடிவு செய்தது.

அப்பழுக்கில்லாமல் ஆண்டுவந்த திவோதாசாவின் ஆட்சிக்கு இடைஞ்சல் ஏற்படுத்த அறுபத்துநான்கு யோகினிகள் வந்தனர். அவர்கள் ஆனந்தவனம் வந்ததுதான் தாமதம் சொர்க்கலோகம் போல் காட்சியளித்த அதன் அழகில் மயங்கி அங்கேயே தங்கிவிட

முடிவு செய்தனர். அவர்கள் திரும்பி வராமல் ஆனந்த வனத்திலேயே தங்கி விட்டனர்.

ஆனந்தவனத்தில் சிவ சிந்தனையை ஏற்படுத்த சூரிய பகவான் முயன்றார். அங்கே அவர் ஜோதிடராக, பிராமணராக, வணிகராகப் பண்டிதராகப் பல்வேறு வடிவங்கள் கொண்டு சுற்றி வந்தார். அவரும் ஆனந்தவனத்தில் எழிலால் கவரப்பட்ட நிலையில் ஏதும் இடைஞ் சல் செய்ய இயலவில்லை. அவரும் அங்கேயே தங்கிவிட எண்ணி, பன்னிரெண்டு ரூபங்கள் எடுத்துக் காசியில் பல்வேறு இடங்களில் தம்மை இருத்திக் கொண்டார்.

இவரும் தங்கி விட்ட நிலையில் சிவ சிந்தனையை ஏற்படுத்தச் சிவகணங்களே வந்தன. அவர்களும் ஆனந்தவனம் ஏற்படுத்திய ஆனந்தத்தை அனுபவித்து அங்கேயே தங்கிவிட்டன.

காசியில் விசுவநாதரை மீண்டும் இருக்கச் செய்ய விநாயகப் பெருமான் முயற்சித்தார். விநாயகப் பெருமான் ஒரு வயதான ஜோதிடர் உருவத்தை எடுத்துக் கொண்டார். காசி மக்களுக்குச் சில நெருக்கடி தரும் கனவுகளை ஏற்படுத்தினார். காசி மக்கள் பயந்து இறை துதி செய்தனர். மேலும் விநாயகப் பெருமான் மக்களைக் காலையில் சந்தித்துக் கனவின் பலன்களைக் கூறித் தம் பக்கம் இழுத்துக் கொண்டார்.

இப்படியே அரண்மனைவரை அவர் புகழ் பரவ அந்தப்புரப் பெண்களும் இவரிடம் பலன் கேட்டறிந்தனர். அப்படியே அரசியின் நன்மதிப்பையும் பெற்றார். அரசி அரசரிடம் வயதான ஜோதிடரின் பெருமைகளைக் கூறி அவரைக் கௌரவிக்கும்படி கூற அரசன் அவரை அரசவைக்கு வரவழைத்துத் தன்னுடைய அரசாட்சி பற்றிக் கூறும்படி கேட்டார்.

இதுதான் சமயம் என்று விநாயகரும் அரசரிடம் அன்றிலிருந்து பதினெட்டாவது நாள் அரசவைக்கு ஓர் அந்தணர் வருவாரென்றும் அவர் கூறும் அறிவுரையை அரசன் கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டுமென்றும் கூறினார். அந்தப் பதினெட்டாவது நாள் மகாவிஷ்ணு அந்தணர் வடிவில் மன்னனின் அரண்மனைக்கு வந்தார். அவரைப் பூரணகும்ப மரியாதையுடனும் சிறப்புடனும் அரசன் வரவேற்றான்.

தர்மங்களை எடுத்துக் கூறிய அவரிடம் தன்னுடைய நாட்டில் நீதி நெறியும் பக்தி நெறியும்

செழித்திருப்பதாக மன்னன் கூறினார். இருந்தாலும் நாட்டில் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபடுவது சிறப்பு என்றும், அதைப் பிரதிஷ்டை செய்த ஏழாவது நாளில் விண்ணிலிருந்து ஒரு தெய்வீக விமானம் வந்து அவனைச் சிவலோகத்துக்கு அழைத்துச் செல்லும் எனவும் கூறினார்.

என்னதான் நீதி தர்மம் செழித்திருந்தாலும் சிவ வழிபாடு முக்கியம் என உணர்ந்தான் மன்னன். தன் மகனான ஸமரஞ்ஜயனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுச் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தான். அன்றிலிருந்து ஏழாவது நாள் மன்னன் சிவனருள் பெற்றுச் சிவலோகம் அடைந்தான்.

அவன் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்த அக்கணம் சிவபெருமான் மந்த்ராலசலத்தில் இருந்துப் புறப்படும் நேரமாகவும் இருந்தது. விசுவநாதர் தன்னுடைய நகரான ஆனந்தவனத்தை அடைந்து கோவில் கொண்டு இன்புற்றார். இன்றும் காசியால் விசுவநாதருக்கும், விசுவநாதரால் காசிக்கும் பெருமை நிலைத்து வருகிறது. என்றும் நிலைக்கும்.

சிவாலயங்களின் சிறப்புகள் - 14

சிவனேச செல்வர்களுக்குப் பணிவான வணக்கங்கள்.

சிவாலயங்களின் சிறப்புகளை மாதம் ஒரு திருக்கோயில் என எழுத இருக்கிறேன். இந்தத் தகவல்கள் கோயிலின் ஆலய குறிப்புகளில் இருந்தும் கோயில் குருக்கள் சொல்வதை வைத்தும் எழுதி எழுதியுள்ளேன்.

வே.இராமசாமி, B.Com.F.C.A.,
Chartered Accountant
பலவான்குடி

நவகைலாயம் பகுதி- 5

8. அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் ராஜபதி – தூத்துக்குடி

நட்சத்திரம்: அசுவதி, மகம், மூலம்

மூலவர்: ஸ்ரீகைலாசநாதர்

அம்பாள்: ஸ்ரீஅழகிய பொன்னம்மை என்ற சிவகாமி

திருக்கோவில் விருட்சம்: வில்வம்

தீர்த்தம்: பாலாவி தீர்த்தம், தாமிரபரணி.

தென்திருப்பேரை கோவிலில் இருந்து அதே பாதையில் 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

நவ கைலாயங்களில் எட்டாவது திருத் தலமாக விளங்குவது, கேது பகவான் அருளாட்சி புரியும் " ராஜ கேது ". எவ்வளவு சோதனைகள் வந்தாலும், நான் தர்மத்தின் பக்கமே நிற்பேன் என்று உள்ளோருக்கு கண்கண்ட தெய்வமாக விளங்குபவர் கேது பகவான்... இத் தலத்தை வணங்கினாலோ அல்லது இத் தல நந்தி பெருமான் உள்ள ஒட்டப்பிடரத்தில் நந்திக்கு அபிஷேகம் செய்தாலோ கால் நடைகளுக்கு நோய்கள் வருவதில்லை.

தமிழகத்தில் வேறு எங்கும் காணப்படாத கண்ணப்ப நாயனாருக்கென தனிச் சன்னதி உள்ளது. இச்சிலையின் உயரம் 4 1/2 அடி மிருகசீரிட நட்சத்திரத்தில் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் இங்கு நடந்து வருகின்றன. பொதுவாக சிவன் கோயில்களில் நவகிரக சன்னதி

முருகன் ஆகியோர் தனிச்சன்னதிகளில் அருள்பாலிக்கின்றனர். கோயில் நுழைவு முன் மண்டபத்தில் அதிகார நந்தியும் எதிரே பைரவரும் வீற்றிருக்கின்றனர்.

இங்கு “நித்ய அக்னி” எனப்படும் விநாயகர், கைலாச நாதர், அம்பாள் ஆகியோருக்காக மூன்று கலசங்கள் வைத்து தினசரி யாகம் நடத்தி பூஜைகளும் ஆராதனைகளும் நடப்பது சிறப்பாகும். பொதுவாக ஈசனுக்கு முன் தீபாராதனை மட்டும் காட்டுவர். ஆனால் இங்கு ஈசனைச் சுற்றிலும் பஞ்ச தீபாராதனை காட்டுகின்றனர். காரணம் ஈசனுக்கு ஈசானம் தத்புருஷம், வாமதேவம், சத்யோஜாதம் அகோரம் என ஐந்து முகங்கள் உண்டு என்பதால், நெல்லிமரம் தலவிருட்சமாகவும் பாலாவி தீர்த்தமாகவும் விளங்குகிறது.

ஞாயிறு பகல் 12 மணிமுதல் 1.30 வரையிலும் செவ்வாயன்று காலை 9.00 முதல் 10.30 மணி வரை நடக்கும் பரிகார பூஜைகளில் பங்கு பெறுவதன் மூலம் கிரக

இருக்கும். மாறாக இங்கு நவலிங்க சன்னதி அமைக்கப்பட்டுள்ளது. காளஹஸ்திக்கு இணையான தலம் என்பதால் இதை தென் காளஹஸ்தி எனச் சொல்லப்படுகிறது.

இத்தலத்தில் வீற்றிருக்கும் கைலாச நாதர் லிங்கத்தின் நான்கு புறங்களிலும் நான்கு சக்ரவடிவங்கள் உள்ளன. ஈசனின் வாகனமான நந்தி பிரதான சன்னதியின் முன் பிரதோஷ நந்தி என்ற திருநாமத்தில் அருள்பாலிக்கின்றார். இடப்புறத்தில் சவுந்திர நாயகி சன்னதி அமைந்துள்ளது.

மேலும் 63 நாயன்மார்கள், காளஹஸ்தி விநாயகர், ஆதிகைலாசநாதர் காளத்தீஸ்வரர் ஆகியோரை நால்வர் வணங்கும் கோலம், வள்ளி தெய்வயானை சமேத

தோஷங்கள் நீங்குகின்றன. கால சர்ப்ப தோஷம், திருமண தடை, பிதுர் தோஷம் ஆகியவற்றுக்கு சிறந்த பரிகார ஸ்தலம். ஈசனுக்கு “ஆஷுதோஷ” என்ற திருநாமமும் உண்டு. அதன் பொருள், “எதை விரும்பி ஈசனிடம் கேட்கிறோமோ அதை முழு மனதுடன் ஆனந்தமாக வழங்குவார்” என்பதாகும். கலியுகத்தில் சிவபெருமானுக்கு பூஜை செய்வதைத் தவிர வேறு எந்த வழியும் தோஷ நிவர்த்திக்கு இல்லை என்பது வேத ஆகம விதிகளில் காணப்படும் நியதி ஆகும்.

சுவாமி கைலாசநாதர்:

கிழக்கு நோக்கிய தனி கருவறையில் சுவாமி கைலாசநாதர் காட்சித் தருகிறார். இந்த லிங்கத்தின் நான்கு பக்கமும் சக்கர முத்திரை அமையப்பெற்றுள்ளது. இங்குச் சிவபெருமானின் ஐந்து முகங்களை குறிக்கும் விதமாக லிங்கத் திருமேனியை சுற்றி பஞ்சமுக தீபாராதனை காண்பிக்கப்படுகிறது.

சௌந்தரிய நாயகி:

தெற்கு நோக்கிய தனி கருவறையில் சௌந்தரிய நாயகி அம்மை ஒரு கரத்தில் மலர் ஏந்தியும், மற்றொரு கரத்தைக் கீழே தொங்கவிட்ட படியும் நின்ற கோலத்தில், புன்னகை பூத்த முகத்தவளாகக் காட்சித்தருகிறாள்.

திருக்கோவில் அமைப்பு:

முற்காலத்தில் கட்டப்பட்ட பழைய கற்கோவில் சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு

காரணமாகச் சிதிலமடைந்து விட்டது. இந்தக் கோவிலில் இருந்த விக்ரஹங்கள் மற்றும் பொருட்கள் பல இடங்களுக்கு ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டது. இங்கிருந்த நந்தி விக்கிரகம் தற்போது ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் உள்ளதாகக் கூறப்படுகிறது. அதற்குப் பின்னர் இந்தக் கோவில் முறையான பராமரிப்பு இல்லாமல் பல ஆண்டுகளாகப் பாழடைந்த நிலையில் இருந்தது. தற்போது உள்ள கோவில் இக்கால நவீன கட்டமைப்பு மூலம் கட்டப்பட்டது ஆகும். கைலாஷ் அறக்கட்டளை மேற்கொண்ட தீவிர முயற்சியால் 2010 ஆம் ஆண்டு இந்தக் கோவில் புதிதாகக் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடை பெற்றது. இங்கு அதிகாரநந்தி, பிரதோஷ நந்தி, விநாயகர், சுப்பிரமணியர், கண்ணப்ப நாயனார், சண்டிகேஸ்வரர், நவலிங்கங்கள், சூரியன், சந்திரன், பைரவர், ஆகியோர் பரிவார மூர்த்திகளாக எழுந்தருளி உள்ளார்கள்.

திருக்கோவில் சிறப்புக்கள்:

1. இங்குக் கண்ணப்ப நாயனாருக்கு தனி விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜைகள் நடைபெறுகிறது.

2. இங்கிருக்கும் சிவபெருமானை வணங்குவது காளஹஸ்தியில் உள்ள சிவனை வணங்குவதற்கு சமம் ஆகும். எனவே இந்தத் தலம் தென் காளஹஸ்தி என்று அழைக்கப்படுகிறது.

3. இங்கு நவகிரகங்களுக்கு பதிலாக நவ லிங்கங்கள் சந்நிதி அமையப்பெற்றுள்ளது.

4. லிங்கத்தின் நான்கு பக்கமும் சக்கர முத்திரை அமையப்பெற்றுள்ளது

முக்கிய விழாக்கள்:

இங்கு சித்திரை தமிழ் வருடப்பிறப்பு, ஐப்பசி அன்னாபிஷேகம், மார்கழி திருவாதிரை, மாசி சிவராத்திரி ஆகிய வருடாந்திர உற்சவங்களும், பிரதோஷம், பௌர்ணமி ஆகிய மாதாந்திர உற்சவங்களும் விமரிசையாக நடைபெறும்.

நடைதிறப்பு காலை 7.00 மணி முதல் 10.30 மணி வரை, மாலை 5.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை.

(தொடரும்)

திவ்ய தேச கவிதை தரிசனம் –30

திருவண்புருடோத்தமம்

அழ. மணிமேகலை,
காரைக்குடி

108 திவ்யதேசங்களுள் முப்பதாவது திவ்யதேசம்,திருவண்புருடோத்தமம். சோழ நாட்டுத் திருப்பதிகளுள், இது முப்பதாவது திவ்யதேசமாகும். சீர்காழிக்குக் கிழக்கே ஐந்து மைல் தொலைவில் இருக்கின்ற இத்தலம், திருநாங்கூர் திவ்யதேசத்துள் ஒன்றாகும்.

திருநாங்கூரிலும் திருநாங்கூரைச் சுற்றிலும் அமைந்துள்ள பதினோரு திருநாங்கூர் திருப்பதிகளுள், திருக்காவளம்பாடி மற்றும் திருஅரிமேயவிண்ணகரம் என்ற இருதலங்கள் குறித்து முன்பதிவில் கண்டுள்ளோம். இத்தலம் திருநாங்கூரில் நாம் காணப்போகும் மூன்றாவது தலமாகும். அயோத்திஎம்பெருமானேஇங்குப்பதினொருவரில்ஒருவராகஎழுந்தருளியுள்ளார். அதனால் தான் அவருக்குப் புருஷோத்தமன் என்ற திருநாமம் உண்டாயிற்று. குறைவில்லா ரட்சிப்புத் தன்மை கொண்டு வள்ளல் போல் தன் அருளை வாரி வழங்குதலால், இவர் வண்புருஷோத்தமன் எனப்பட்டார். புருஷர்களில் உத்தமன் புருஷோத்தமன். அதிலும் வேண்டியவர்களுக்கு வேண்டியன கொடுப்பவன் ஸ்ரீவண்புருஷோத்தமன். தை அமாவாசைக்கு மறுநாள் நடைபெறும் திருநாங்கூரின் புகழ்பெற்ற கருடசேவைக்கு, இப்புருஷோத்தமனும் எழுந்தருள்கிறார்.

இங்குள்ள

மூலவர் – புருஷோத்தமன்

தாயார் – புருஷோத்தம நாயகி

தீர்த்தம் – திருப்பாற்கடல் தீர்த்தம்

விமானம் – சஞ்சீவி விக்ரஹ விமானம்

தலவிருட்சம் – பலாசமரம்

கோலம் – கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்

தமிழ்நாட்டில் உள்ள திவ்யதேசங்களில் புருஷோத்தமன் என்ற பெயரில் எம்பெருமான் எழுந்தருளியிருப்பது இங்கு மட்டும்தான். வியாக்ர பாத முனிவர், எம்பெருமானுக்குப் பூமாலை கட்டிச் சூட்டும் கைங்கர்யத்தை மேற்கொண்டிருந்தார். இக்கோவிலில் எம்பெருமானுக்கு மாலை கட்ட வந்தவர், தனது குழந்தை உபமன்யூவை உட்கார வைத்துவிட்டுப் பூப்பறிக்கச் சென்றார். குழந்தை பசியால் அழுதது. புருஷோத்தம நாயகி தூண்ட, வண்புருஷோத்தமன் திருப்பாற்கடலை வரவழைத்து, குழந்தைக்குப் பாலைப் புகட்டி அனுக்கிரகம் செய்து, வியாக்ர பாத முனிவருக்கும் காட்சி தந்தாராம். அதனால், இங்குள்ள தீர்த்தம் திருப்பாற்கடல் தீர்த்தம் ஆயிற்று.

காப்பியக் கவிஞர் மீனவனார், “திருஅரிமேய விண்ணகரம்” குறித்து எழுதிய ஐந்து பாடல்களும் அவற்றின் விளக்கங்களும் பின்வருமாறு.

1. திருமழிசை ஆழ்வார், நான்முகன் திருவந்தாதியில், நாராயணன் தனது திருநாபிக் கமலத்தில் நான்முகனைப் படைத்தருளியதாகப் பாடுகிறார். அத்தகைய முதற்பொருளான திருமால், வில்லொன்றைக் கொண்டு இராவணனை வீழ்த்தியவன். தந்தை உரைத்த சொல் ஒன்றுக்காக, நாடை விட்டு அகன்ற சோதி வடிவானவன். வாழ்க்கை துணை ஒன்றேயென ஏகபத்தினியாக வாழ்ந்தவன். அந்த அயோத்தி ராமர் எழுந்தருளியிருக்கின்ற தலம் இந்தப் புருஷோத்தமம்.

நல்லுந்தித் தாமரையில் நான்முகனைப் பயந்தமால்

வில்லொன்றால் இராவணனை வீழ்த்தியவன் தாதையுரை

சொல்லொன்றால் நாடகன்ற சோதியான் வாழ்வினிலே

இல்லொன்றே எனவாழ்ந்தான் இருந்தபுரு டோத்தமமே.

2. திருநாங்கூர் திருத்தலங்களில் ஒன்றான திருவண்புருஷோத்தமத்தில், புருஷோத்தம நாயகியுடன், என்றென்றும் மங்காத புகழுடன், சிறப்புப் பெற்றவனாய் இருக்கின்றான் நம் புருஷோத்தமன். அவன் திருப்பாற்கடலில் உறைந்திருப்பவன். வளைந்த கடல் சூழ்ந்த இலங்கையில் உள்ள அரக்கர்களை அழிப்பதற்காக, ஓங்கி அம்பெய்தவன். தான் துன்பமுற்றாலும் அடுத்தவன் இன்பமுற வேண்டுமென நினைக்கும் உத்தமன். அத்தகைய உத்தமனை வணங்குவோம்.

நாங்கூர்வண் புருடோத் தமநா யகியுடனே

தேங்குபுகழ்ச் சீராளன் திருப்பாற் கடல்நாதன்

வாங்குகடல் சூழ்இலங்கை வல்லரக்கர் நலமழிய

ஓங்கியே அம்பெய்த உத்தமனை வணங்குதுமே.

3. பிறர்படும் துன்பத்தை உடனடியாக மாற்றக்கூடிய இயல்பையுடையவன். இவ்வுலகின் மீது வைத்துள்ள பற்றை விட்டொழித்தவர்களுக்கு அருள் பாலிக்கும் இயல்புடையவன். ஆலிலையின் மேல் குழந்தைக் கண்ணனாய்க் கிடந்தவன். அவனுடைய நலம் பொருந்திய பாதங்களைப் பற்றிக் கொண்டால் நாம் உயர்வு பெறலாம்.

உற்றார்தம் துன்பத்தை உடன்மாற்றும் இயல்புடையான்

பற்றாசை விட்டவரைப் பாலிக்கும் அருளுடையான்

உற்றாலின் இலைமேலே ஒருகுழந்தை எனக்கிடந்தான்

நற்றாளைப் பற்றிவிடின் நாம்உய்தி பெறலாமே.

4. உத்தமனாய் வாழ்கின்ற புருஷோத்தமப் பெருமான், எத்திசையையும் அளந்த திருமால் ஆவார். அவர் அழகான சங்கை எடுத்து வாயில் வைத்து ஊதும் பொழுதே, பகைவர்களின் உள்ளம் நடுங்கும். அவர், நமக்கு மிகப்பெரிய செல்வம் போன்றவர். அவரைப் போற்றி, வளம் பல பெற்று, வாழ்க்கையில் உயருங்கள்.

உத்தமனாய் வாழும்ஒரு புருடோத் தமநம்பி

எத்திசையும் அளந்தமால் எழிற்சங்கம் எடுத்துவாய்

வைத்தூதும் போதே வரும்பகைவர் உளம்நடுங்க

வைத்தமா நிதிபோற்றி வளம்பலபெற்(று) உய்யுமினே.

5. எம்பெருமான், இந்த உலகம் உய்வதற்காகப் பிறந்த பரந்தாமன். நம் வாழ்வில் சிறப்பை உண்டாக்குவதற்காக எழுந்தருளியுள்ள திருவரங்கன்.

அவன் தம்பியான விபீஷணனுக்கு அளித்த தாசரதி கோயில் கொண்டிருக்குமிடம், சிவந்த பலாமரங்களும், செண்பகம், வாழை, மாமரங்களும், குருக்கத்திச் செடிகளும் சூழ்ந்து மணம் வீசும்

அரக்கர் இனத்தையே வேரோடு அழித்த கார்வண்ணக் கடவுள். அந்த அயோத்தி ராமர் விரும்பி உறைந்திருக்கும் தலம் இத்திருவண்புருஷோத்தமம். இந்தப் புருஷோத்தமனின் பொன் போன்ற அடிகளைப் போற்றி வணங்குங்கள்.

பாருய்யப் பிறந்திட்ட பரந்தாமன் நம்வாழ்வில்

சீருய்ய எழுந்தநற் சிறீரங்கன் அரக்கரின

வேரறுத்த கார்க்கடவுள் விரும்பியே உறைதிருவண்

புருடோத் தமநாதன் பொன்னடிகள் போற்றுமினே.

மங்களாசானப் பாடல்

நடுங்க வைக்கும் பெரிய கடலிலே அணைகட்டி இலங்கையை அடைந்து, இராவணனது பத்துத் தலைகளையும் பாணத்தினால் கொய்து, அரசாட்சியை

பாக்குமரங்கள் ஓங்கி வளரப் பெற்ற தலம், திருநாங்கூரிலுள்ள இத்திருவண்புருடோத்தமமே எனக் கூறும் திருமங்கையாழ்வாரின் பத்து மங்களாசாசனப் பாடல்களுள் ஒன்று.

கம்பமா கடலடைத்து இலங்கைக்குமன் கதிர் முடியவை பத்தும்

அம்பினாலறுத்து அரசு அவன் தம்பிக்கு அளித்தவன் உறைகோயில்

செம்பலா நிரை செண்பகம் மாதவி சூதகம் வாழைகள் சூழ

வம்புலாம் கமுகோங்கிய நாங்கூர் வண்புருடோத்தமமே.

பெரியபுராணக் கதைக் களம்

பகுதி – 13

அன்பர்களே!

தொண்டர்தம் பெருமை அளவிடற்கு அரியது. அவர்களின் அருள் வரலாறு நம்மை நல்வழியில் நடத்தும். திருநெல்லையின் இவ்விதழில் புதுமை இணைப்பாகப் பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள அறுபத்து மூன்று அருந்தொண்டர் கதைகள் ஒவ்வொன்றாகக் காதுகளுக்கும், கண்களுக்கும் மனதிற்கும் இன்பம் சேர்க்கும் வகையில் கதைவடிவில் ஒளிபரப்பாகிறது. கேட்டு, உணர்ந்து அனுபவித்து மகிழுங்கள்.

தென் சபாநாயகர் கோயில் தரிசனம்

உ

பங்குனி உத்திரத்தை முன்னிட்டு வள்ளி, தெய்வானை சமேத அருள்மிகு ஆறுமுகப்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. 21.4.2025 அன்று அருள்மிகு சிவகாமி அம்மன் உடனுறை ஆனந்த நடராச மூர்த்திக்கு சித்திரை மாத திருவோண நட்சத்திர மகா அபிடேகம் சிறப்பாக நடைபெற்றது

சித்திரை – வைகாசி மாத வழிபாட்டு நிகழ்ச்சிகள்

16.04.25	சங்கடஹர சதுர்த்தி	மாலை	விநாயகர் வழிபாடு
20.04.25	தேய்பிறை அஷ்டமி	மாலை	வைரவர் வழிபாடு
21.04.25	திருவோணம்	மாலை	ஆனந்த நடராச மூர்த்தி மகா அபிடேகம்
25.04.25	பிரதோஷம்		
29.04.25	கார்த்திகை	மாலை	ஸ்ரீ ஆறுமுகர் வழிபாடு
04.05.25	வளர்பிறை அஷ்டமி	மாலை	வைரவர் வழிபாடு
08.05.25	வளர்பிறை ஏகாதசி	காலை	பெருமாள் வழிபாடு
10.05.25	பிரதோஷம்		
12.05.2025	பௌர்ணமி	மாலை	சிவகாமி அம்மன் வழிபாடு
16.05.25	சங்கடஹர சதுர்த்தி	மாலை	விநாயகர் வழிபாடு
20.05.25	தேய்பிறை அஷ்டமி	மாலை	வைரவர் வழிபாடு
24.05.25	பிரதோஷம்		
26.05.25	கார்த்திகை	மாலை	ஸ்ரீ ஆறுமுகர் வழிபாடு

ஒலிப்பேழை

கம்ப வாரிதியின் பக்கம்

திருநெல்லை இதழில் மாதந்தோறும் கம்பவாரிதி இலங்கை திரு ஜெயராஜ் அவர்களிடம் வினாக்களை எழுப்பி அவ்வினாக்களுக்கு விடையை அவர்களின் குரல் வழியாகப் பெற்று திருநெல்லையில் பதிவிடுகிறோம்.

கம்பவாரிதி ஐயா அவர்கள் தொடர் சுற்றுப்பயணத்தில் இருப்பதால், அவர்களால் கேள்வி பதில் அளிக்க இயலவில்லை, அவர்கள் கேள்வி பதில் அனுப்பியவுடன் அதை இந்த இதழில் பதிப்பிக்கிறோம்

பயிற்சிப் பேழை

ஞானசம்பந்தர் தேவாரம்

திருநாவுக்கரசர் தேவாரம்

சுந்தரர் தேவாரம்

திருப்புகழ்

கோவிலூர் ஆண்டவர் நூலகம்

கோவிலூரில் அமைக்கப்பெற்றுள்ள ”கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில்” சுமார் 44,000 க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. நூல் விவர அட்டவணையைப் பதிவிறக்கம் செய்ய இங்கு சொடுக்கவும்.

கோவிலூர் ஆண்டவர் இணைய நூலகம்



கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள நூல்கள் அனைத்தையும் கோவிலூர் ஆண்டவர் நூலகம் என்ற இணையதள நூலகத்தில் பதிவேற்றம் செய்து தமிழ்க் கொடையாக அளிக்க முடிவு செய்துள்ளோம்.

தற்போது சுமார் 6627அரிய நூல்கள் இணைய நூலகத்தில் உள்ளன.

இப்போது நாள் ஒன்றுக்கு சுமார் 3000 பக்கங்களைப் புதிதாக இந்த நூலகத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்கலாம்/ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்க / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள (பட்டியலில் காட்டப்பெற்றுள்ள) எந்த நூலாவது உங்களுக்குத் தேவை என்றால் நூலகப் பொறுப்பாளர் திருமதி.சோமசுந்தரி அவர்களைத் (தொலைபேசி எண் 9488124941 என்பதில்) தொடர்பு கொள்ளவும். அந்த நூல் பதிப்புரிமைக்கு அப்பால் இருக்கும் நிலையில் அதை நம் இணைய நூலகத்தில் சேர்த்திட ஆவன செய்கிறோம். தாங்களும் அந்த நூலை உங்கள் வீட்டில் இருந்து இணையவழியாகப் படிக்கலாம். நூல் இணையத்தில் சேர்த்தபின் உங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும். நீங்கள் அந்த நூலை இணைய நூலகத்தில் படித்துக் கொள்ளலாம் அல்லது பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதற்கு எந்தக் கட்டணமும் இல்லை

இணைய நூலகத்தைப் பயன்படுத்துவோம். இறை தத்துவங்களை அறிவோம்.

முந்தைய இதழ்களை படிக்க அந்தந்த லிங்கை கிளிக் செய்யவும்

திருநெல்லை – புரட்டாசி

திருநெல்லை – ஐப்பசி

திருநெல்லை – கார்த்திகை

திருநெல்லை – மார்கழி

திருநெல்லை – தை

திருநெல்லை – மாசி

திருநெல்லை – பங்குனி

திருநெல்லை – சித்திரை

திருநெல்லை – வைகாசி

திருநெல்லை – ஆனி

திருநெல்லை – ஆடி

திருநெல்லை – ஆவணி

திருநெல்லை – புரட்டாசி

திருநெல்லை – ஐப்பசி

திருநெல்லை– கார்த்திகை

திருநெல்லை– மார்கழி

திருநெல்லை– தை

திருநெல்லை– மாசி